எழுத்து

இலக்கிய காலாண்டு ஏடு

ஆசிரியர்:

சி. சு. செல்லப்பா

பத்தாம் ஆண்டு ஜூலை—செப்டம்பர் 1968 ஏடு 113

இலக்கியத்தில் கண் வர்ணனை

(ஆராய்ச்சி கட்டுரை)

— செல்வம்

மூன்றும் முனை

(சிறுகதை)

— சி. சு. செல்லப்பா

12

விலை ரூ. 1-50

எழுத்து

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா

காலாண்டு ஏடு

ஜுலை—செப்டம்பர் 1968

இந்த ஏட்டில்	2	தலையங்கம்
இரணியம் பிறப்பதோ	3	சி. சு. செ.
குருவி	3	தி. சோ. வேணுகோபாலன்
பூவும் நாகமும்	4	நீல பத்மநாபன்
இரை	4	சி. முத்துகிருஷ்ணன்
அடுத்த கேள்வி	4	வ. பா. சடகோபன்
பெண்மை	4	ர. பன்னீர்செல்வம்
சிலை	4	சி. தில்லைநாதன்
மூன்றும் முனை	5	சி. சு. செல்லப்பா
இலக்கியத்தில் கண்கள்	9	செல்வம்
மறுபயணம்	26	இரா. மீனாட்சி

எழுத்து—பத்தாம் ஆண்டு—ஜுலை-செப்டம்பர் 1968—ஏடு 113
காலாண்டு தோறும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை, அக்டோபர் மாதங்களில் வெளிவரும்.
ஆபிஸ் : 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆண்டு சந்தா : ரூ. 6-00;	மூன்று ஆண்டுகள்	ரூ. 15-00
இலங்கை, மலேயா : ரூ. 10-00	,,	ரூ. 25-00

வெளியூர் செக்குகளுக்கு 50 பைசா 'கிளியரன்ஸ்' கட்டணம் சேர்த்து அனுப்பவேண்டும்.
கதை, கட்டுரை, கவிதைகளுடன் போதிய ஸ்டாம்பு வைக்க வேண்டும்.
மதிப்புரைக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.

தலையங்கம் :

இந்த ஏடு

எழுத்து பற்றி இந்த பத்தாண்டு காலத்தில் குறிப்பிடப்பட்டு வந்திருக்கும் கருத்துக்களில் இரண்டை இந்த சமயத்தில் எடுத்துக் காட்ட வேண்டி இருக்கிறது. முதலாவதாக எழுத்து வில் புதுக் கவிதைகள் வருவதை வைத்தும், விமர்சனம் சம்பந்தமாக மேல் நாட்டிலே செழித்து வளர்ந்திருக்கும் கருத்துக்கள், கோட்பாடுகள் கையாளப்பட்டுவரும் செயல்முறை விதங்களை குறிப்பிட்டு அவைகளை பின்பற்றி நமது பண்டைய, இன்றைய இலக்கியப் படைப்புகளை மதிப்பீடு செய்து பார்ப்பது லாப கரமாக இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டு வந்திருப்பதைக் கொண்டும் எழுத்து பழமை இலக்கியத்தை புறக்கணிப்பது, அக்கறை காட்டாதது என்று ஒரு தரப்பு கருத்து. இரண்டாவதாக, சி. கனகசபாபதி, எம். பழனிசாமி ஆகியோர் பழைய இலக்கியங்களை பிரஸ்தாபித்து கருத்துக்களை சொல்லியும், சங்க இலக்கியத்தில்காணும் புதுத்தன்மையையும் இன்றைய புதுத் தன்மையையும் ஒப்பிட்டுப் பார்த்தும் எழுதிய கட்டுரைகளை வைத்து எழுத்து பண்டிதப் போக்குப் பார்வைக்கு மாறி வருவதாக ஒரு கருத்து. பழய கதை விஷயத்தை, பழய யாப்பு அமைதியிலேயே கொடுக்கும் பிச்சமூர்த்தியின் கவிதையை போடுவானேன் என்று கூட கேள்வி கேட்கப்பட்டது.

ஆக இரண்டு கடைக்கோடி கருத்துக்கள். இந்த கருத்துக்களைப் பற்றி இப்போது இங்கு நாம் விவாதிக்க விரும்பவில்லை. நாம் குறிப்பிட விரும்புவது இந்த இரு துருவ பார்வைகளுக்கு இடையில் உள்ள ஒரு மத்திய உத்தேசத்தை எடுத்து கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பது தான். இலக்கிய மரபு என்பதுக்கு ஒரு சத்தான அர்த்தம் இருப்பதனுல், பழசு, புதுசு என்று கட்சிகட்டி ஒன்றை ஒன்று மறுப்பது என்பது இல்லை. அவ்வப்போது புதுசாக வருவதெல்லாம் வரிசை சேர்ந்து மரபாகி விடுகின்றன. மரபிலிருந்து புதுமை துளிர்க்கிறது. எனவே எழுத்து இரண்டையும் இணைத்து, இழைந்தோடும் ஒரு சாதனமாக செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இந்த ஏட்டில் நீண்ட கட்டுரையான 'இலக்கியத்தில் கண் வர்ணனை' யை வாசகர் முன் வைக்கிறோம். பழமை வாதிகளும் சரி, புதுமை வாதிகளும் சரி கவனித்தாக வேண்டிய ஒரு கட்டுரை அது. அது புதிதானது மட்டும் இல்லை. தன் ரகத்தில் தானே முதலாவதானது. பழய இலக்கியங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பி.எச்.டிக்கும் டாக்டரேட்டுக்கும் ஆராய்ச்சி நூல்கள் எழுதப்பட்டிருப்பதை பார்க்கிறோம். இது அந்த ரகத்தில் ஒன்று. ஆனல் இரண்டாயிரம் ஆண்டு நம் கவிதை இலக்கியத்தில் 'கண்' சம்பந்தமாக உவமை நயம் எந்த அளவுக்கு வளம்பட்டிருக்கிறது என்பதை பட்டியல் காட்டுவதோடு நின்றுவிடாமல், அந்த வளம் கட்டம் கட்டமாக சிறப்பாகி இருப்பதை மட்டும் ஆராய்வதோடு நிற்காமல், காலத்துக்கு ஏற்பவும் கால நடப்புக்கு இயையவும்காணும் பொருள்களுக்கு பொருந்தவும் உவமைகள் புதுபுதுசாக பிறந்திருப்பதை விளக்குவதோடு மட்டும் நிறுத்தாமல், புதுக்கவிதை முன்னோடிகளில் ஒருவரும் கனிசமான புதுக் கவிதைகள் எழுதி இருப்பவருமான வல்லிக்கண்ணன் எழுதிய 'உன் கண்கள்' என்ற கவிதையை எடுத்துக் கொண்டு அதில் தொனிக்கும் தற்காலத் தன்மையை எடுத்துக் காட்டி மரபுவழி அகத்துறைக் கவிதைகளுடன் ஒப்பிட்டும், மரபுவழி அகத்திணை இலக்கணத்துடன் அதுக்கு எந்த விதமான உறவு இருக்கிறது என்று ஆராய்ந்தும் பார்க்கப்பட்டுள்ள கட்டுரை.

ஒரு சிறிய கட்டுரையில் பரந்த விஷயம் பற்றி பெரிய ஆராய்ச்சியை ஆழ்ந்து செய்திருக்கிருர் செல்வம். கட்டுரையை படிக்கும் போது அவரது ஆராய்ச்சித் திறன் நன்ருகத் தெரியும். இந்த கட்டுரையை வெளியிடுவதில் எழுத்து பெருமைப் படுகிறது.

இந்த ஏட்டை ஒரு நீண்ட கட்டுரையும் ஒரு சிறுகதையும் அதிகம் ஆக்ரமித்துக் கொண்டு விட்டது. சிறுகதை 'மூன்ரும் முனை'யைப் பற்றியும் சில வார்த்தைகள். வ. வே. சு. அய்யர் கையில் பிறந்து பி. எஸ். ராமையா கையில் வளர்ந்து பலர் கையால் இன்று வளமாகி இருக்கும் துறை சிறுகதை. பத்தாண்டுக்குப் பத்தாண்டு வாழ்வும் மனப் போக்கும், மதிப்பும் புதுச் சாயல்கள் பெறுகின்றன. இவற்றின் தன்மைகள் உடன் நிகழ் காலப் படைப்பில் ஏற வேண்டும், தெரிய வேண்டும். பால்ய மணம், விதவாவிவாகம், வரதட்சணைக் கொடுமை (பழய தோரணையில்) ஏழையின் துயரம் (பொன்னகரம் பாணியில்) இதெல்லாம் இன்று அவ்வளவாக கதைக்கான எடுப்பான விஷயங்கள் அல்ல. ஏங்: கிள் என்கிருேமே கோணம் புதுசாக பிடிக்கக்கூடு மானுல் அபூர்வமாக கையாளலாம். நச்சுப் படுத்தப்பட்ட பிரச்னைகளை எடுத்துக் வாடிக் கையான வகையறுப்பு, திறவு, தீர்வு செய்வது வளர்ச்சி ஆகாது. புதுப் பொருளும், புது நோக்கும் புது உத்தியும் ஏற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். 'மூன்ரும் முனை' சிறுகதை அந்தவிதமானதா என்று வாசகர்கள் பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்கிருேம்.

அடுத்த ஏட்டில்

நீ இன்று இருந்தால்

மகாத்மா காந்தியைப் பற்றிய
2000 வரிகள் கொண்ட
புதுக்கவிதை குறுங்காவியம்

இரணியம் பிறப்பதோ

சி. சு. செ.

அடிமைக்குத் தளை இல்லை யாரும் இப்போது
அடிமை இல்லை அறிக என்றார், என
ரஷ்யப் புரட்சியை வரவேற்ற பாரதி
இன்று இருந்தால் என்ன பாடுவான் ?

இரண்யன்போல் அரசாண்டான் கொடுங்
கோலன்
ஜார் என்னும் பேரிசைந்த பாவி,
இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்து விட்டான்,
இடிபட்ட சுவர்போலே கலி வீழ்ந்தான்,
கிருதயுகம் எழுகமாதோ, என்றும்
பெருமிதம் கொண்டு பார்யுகப் புரட்சி என்றும்
வையகத்தீர் புதுமை காணீர் என்று அன்று
உலகறிய கவிச் சொல்லில் பொரித்து
வைத்தேன்

அரை நூறு ஆண்டு அதன் சாதனை கண்டு
நரையோரும் வியப்பில் ஆழ்ந்து இருக்கையில்,
இன்ெருரு சொல்லினைக் கேட்டேன்;
கொன்றிடல்போல் ஒரு வார்த்தை அது !
மையத்து ஐரோப்பிய கையகல செக்நாட்டை
கரடி பின்வந்து கட்டி நெறித்ததுபோல்
கரவடமாய் தொகையிலாப் படைகளோடு
அரவமாய் ஊர்ந்து வந்து விழுங்கினதாம் !

சமவாழ்வு உரிமை ஒப்புதல் கொடுத்து
சகவாழ்வுக் கொள்கை சாசனம் ஏற்றநாடு,
நேற்றுவரை அதன்வழி நடந்த கொள்கையன்
வயதும்கன் தந்தைபால் பெறும் உரிமையாய்
சற்று சிந்தித்து, தனிமனித சுதந்திரம் தேர்ந்து
தன் நாட்டுக்கு ஏற்ப தாராள திருத்தம் முயல,
வேற்றுவழி அவன் போகிறான் எனவெகுண்டு
மாற்றவழி தெரியாது மென்னியை பிடித்ததாம் !

சாம்ராஜ்யப் பேராசைத் தனிமனித மன்னன்
கெய்ஸர் பெல்ஜியத்தை வீழ்த்தியது பழங்கதை;
சர்வாதிகார வெறித் தனிமனிதத் தலைவன்
ஹிட்லர் போலந்தை வீழ்த்தியது பழங்கதை;
குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுற
குடிமைநீதி கடியொன்றில் எழுந்துவிட்ட
குடியரசில்
சமதர்ம தற்பெருமை பேசிவரும் ஒரு நாட்டில்
ஆதிக்க ஆசை நாகமாய் ஆடுவது புதுக்கதை !

இரண்யனோடு பெரும் கொடுமை அழிந்தது
போல்
ஜார்மூடனோடு அடிமைத்தளை ஒழிந்தது என
நலமான ஒரு வாழ்வு நாடு என உவப்புடனே
பார் உலகே எனப் பறைசாற்றி வருகையிலே,
சரண் அடைய மிரட்டிப் படை எடுத்து
நுழைவதோ?
ஜாரின் ஆவி இன்னும் பேயுருவில் உலவு
வதோ ?
இரணியன் உதிரத்து இருந்து இரணியம்
பிறப்பதோ?
பாரின்கண் மீண்டும் கலியுகம் தோன்றுவதோ ?

குருவி

தி. சோ. வேணுகோபாலன்

சீ ! போ !
சனியனே !
என்ன குதிப்பு ! என்ன கொம்மாளம் !
கீச்சுக் கீச்சென்று காது கிழிபட !

ஊர் நிலவரம் உனக்கெங்கே தெரியும் ?

வாராவாரம் விரதம் இருந்து
வயிற்றுத்தீ அவிக்க
வயிறெரிந்து
வாங்கிவரும் 'பலசரக்கில்'
அரிசி மணி பொறுக்கி
அரைக் குருடாய்ப்போயாச்சு !
....
" காக்கை குருவி எங்கள் ஜாதி '!?!
....
அவனுக்கென்ன ?
பாடினான் !
அகத்துக்காரி
அடுத்த வீட்டிலிருந்து யாரும் அறியாமல்
கூனிக்
குறுகி
கடன் வாங்கி வந்த
அரிசியை
முற்றத்தில் இறைத்து உங்கள்
மாநாடு கூட்டி
மகிழ்ந்து கரம் கொட்டி
பாடினான் !
அவன்
பட்டினி கிடந்தான்;
ஆனாலும் ஊரெல்லாம்
அன்னதானம் நடந்தது;
அந்தக்காலம்!

'படி' அரிசிப் பேச்சால்

பதவி பறிபோகும்;
இந்தக் காலம் !

அன்றவன் அடிமை !
ஆனந்தப் பட்டான்;
இன்று நான் சுதந்திரன் !
சோகப் படுகிறேன் :

சீ ! போ !

பூவும் நாகமும்

நீல பத்மனுபன்

பூ பூக்க நாகம் நக்க
மகரந்தப்பை வெடித்து விம்ம
நவரத்ன கலசம் உடைந்து சிதற
மகரத்ன-நவரத்ன சங்கமம், மகா சங்கமம்

நானில மெங்கனும் புதுப்பூக்கள் பூத்தன
நவநாகங்கள் நெளிந்தன
புதுப்பூக்களில் புதுநாகங்கள் புகுந்து விளையாட
நவநாகங்களை நவபூக்கள் நாடிக்களிக்க
மீண்டும், மீண்டும் மகரந்த-நவரத்ன
நவரத்ன-மகரந்த சங்கமங்கள்; மகா சங்கமங்கள்!

கோடிகோடி பூக்களால் கோடிகோடி நாகங்களால்
குவலயம் நிறைந்து வழிய
நிற்க மண்ணின்றி, நிமிர விண்ணின்றி
உண்ண உணவின்றி கோரமாய் தவிக்க
பூத்த பூவை நாகம் நக்கினுலும்
மகரந்தப்பை வெடித்து விம்மினுலும்
நவரத்ன கலசம் உடைந்து சிதறினுலும்
மகரந்த-நவரத்ன சங்கமங்கள்
நிகழாமல் தடுக்க
பூத்த பூக்களும் முதிர்ந்த நாகங்களும்
ஒன்றுகூடி தீவிரமாய் இராப்பகலாய்
மூளையை உடைக்க
ஆயிரம் ஆயிரம் வழிகள், முறைகள்
தீராத பிரசாரங்கள், எனினும்
பூக்களும் நாகங்களும் பகலிரவு பேதமின்றி
புற்றீசல் போல் புவியெல்லாம் முடிவின்றி
மும்முரமாய் உருவாகி பெருகுவது கண்டு
மூர்ச்சை யானுள் பூமிதேவி.

இரை

சி. முத்துகிருஷ்ணன்

நேற்றுப் பறந்தது
இன்று கூடையில்
ஏதோ பாவமென்றனர்
பாவமாம் புண்ணியமாம்
வயிறில்லையா ?
சதக்......சதக்......
பானையில் விழுந்தது
அரைமணி நேரம்.
மீண்டும் பானையில்
பறந்த வயிறுதான்
நிறைந்து போனதே
எதைத் தேடியதோ
அதுவாய் ஆயிற்று
நேற்றுப் பறந்தது
இன்று பறக்குமா ?

அடுத்த கேள்வி

வ. பா. சடகோபன்

மாற்று இதயமா!
மாண்டவன்
இதயம் வைத்தால்
வாழ்பவன்
நினைவும் கனவும்
மனித நினைவா-
பேய்க் கனவா ?

பெண்மை

ர. பன்னீர்செல்வம்

சிறிய அரும்பு
பெரிய மொட்டு
அழகிய இதழ்
கவரும் நிறம்
சுவையான மலர்

வண்டு வந்து அமர்ந்தது
மது அருந்திச் சென்றது
மலருக்கு மகரந்தம் தந்தது

இதழ்கள் உதிர்ந்தன
அழகும் சிதைந்தது

மலர் சூலுற்றது.

சிலை

சி. தில்லைநாதன்

உளிபட்டதால்
உயிர் வந்ததாம்
உருவம் என்னவோ
உண்மையோ, பொய்யோ ?

ஊர் கூடியது
ஒரு வர்ரம் பார்த்தது.
பெருமையைத் தேடவில்லை
ஊர்க்குருவி காக்கை
உட்கார விட்டது
ஆந்தைக்கு அதிர்ஷ்டமில்லை

அப்படி வெளிச்சம்
உண்மைக்குக் கிடைக்குமா ?

சிறுகதை

மூன்றும் மூனே

சி. சு. செல்லப்பா

வீராசாமி நாயக்கர் 328
துரைசாமி நாயக்கர் 259
சத்யநாதன் 9

நாம்ப வீடிங்

இதே போக்கிலே போனு

அதுக்குள்ளே என்ன சொல்ல முடியும்?

மொத்தம் முப்பதாயிரம் ஓட்டுல்லே எண்ணி ஆகனும்.

அதுக்குள்ளே எப்படிச் சொல்ல முடியும்?

இன்னும் நமக்கு கோட்டையான இடம் வ்ார போதுல்ல தெரியும்.

முதரெண்டும் நெருக்கிக்கிட்டுப் போகும்: மூணுவது... ?

அதுதான் இப்பவே படுத்திருச்சே!

இனி ஏந்திரிக்கவா?

ரெண்டு புலிகளுக்கு நடுவிலே ஒரு ஆடு!

அடுத்த தகவலு இன்னும் அரைமணிக்கு அப்புறம்தானே

குந்திக்கிட்டு பேசிக்கிட்டு இருக்கலாம். உட்காருங்க.

ஆமாம் இந்த சத்யநாதனுக்கு ஏன் இப்படி புத்தி போச்சு?

உலக விவரம் தெரிஞ்சவரு. புத்தி சொல்ற வங்க யாரும் இல்லே பா?

நல்லா கேட்டீங்க. அவருக்கு புத்தி சொல்லணுமா? நாம சொல்லணுமா? ஊருக்கே, ஏன் நம்ம வட்டாரத்துக்கே புத்தி சொல்ற வருக்கு நாம புத்தி சொல்றதா? கேட்டுக்கிடுங்க இளவட்டங்களா. இந்த ஊருலே உங்களுக்கு விவரம் தெரியரதுக்கு முன்னாடி இருந்து அவரு ஒருத்தர்தான்டா இந்த ஊருக்கு. சுயராச்சியம் வாங்கறதுக்கு இந்த ஊரிலே ஒருத்தன் விரலை அசக்கி இருந்தான்னா அவரு ஒருத்தரு தான். இண்ணைக்கு ஆள் முழுங்கி சட்டையை போட்டுக் கிட்டு ஊருலே நடமாடுதாங்களே அவுங்களெல்லாம் பரம்பரையா இல்லெ பஞ்சத்துக்கு தேசியவாதி ஆனவங்க. தெரியுமா? அவருக்குப் போய் நாம புத்திசொல்றதா? குறையையும் கேட்டுக்கிடுங்க. இண்ணைக்குப் போலே இருக்குது. வள்ளிசா நாப்பது வருசத்துக்கு முந்தி. அப்போ அவரு இளம் பிள்ளை. இருபது வயசு இருக்கும்.

சரியாச் சொன்னீங்க. இந்த வருசம்தானே—அவரோட அறுபதாம் வயசை கொண்டாட ஊர்க்காரங்க ஏற்பாடு செய்துக்கிட்டு இருக்கறப் போதானே—இப்படி தேர்தல்லே மாட்டிக்கிட்டாரு, பேரைக் கெடுத்துக்கிட்டு.

என்ன சொன்னீங்க. அவரு பேரைக் கெடுத்துக்கிட்டாருனு. இந்தா பாருங்க. யானை படுத்தாலும் குதிரைமட்டம்தான். ஞாபகம் இருக்கட்டும் சரி... அதை பிறகு பேசிக்கிடுவம்.ல. அவருக்கு இருபது வயசு இருக்கிறப்போ என்ன செய்தாரு தெரியுமா? நம்ம வெள்ளையச் சாம்பான் இருக்கிறன்லே. யாரு தெரியுதா?

தெரியாமே... ... இருசால்கட்ட தமுக்குப் போட்டுக்கிட்டு வாரானே அவன்தானே?

ஆமா. அவனே தான். அவன் கையிலே இருக்கிற தமுக்கை தன் தோளுலே மாட்டிக்கிட்டு நம்ம அக்ராரம் வளியே 'நாளைக்கு காங்கிரஸ் தலைவர்கள் வந்து நம்ம ஊர் பொட்டல்லே பேசறாங்க. எல்லாரும் வரணும்னு தண்டோரா போட்டுக்கிட்டுப் போனவரு. இப்பம் நீங்க யாராவது செய்வீங்களா இப்போ! வெள்ளை வேட்டியும் குடுத்துணியுமா கீளே உட்காந்தா மண் ஒட்டிக்கிடுமோன்னு குதிங்காலாலே உட்கார்ந்துக்கிட்டு இருக்கிங்களே உங்களைத்தான் கேக்கறேன். செய்விங்களா?

நம்மாலே முடியாது பாட்டையா.

அந்த துணிச்சல்காரரா அவரு?

நமக்கு எதுக்கு மாமா அந்த தொழில்?

பின்னே என்னடா! இண்ணைக்கு இப்படிப் பேசறவங்களாடா அண்ணைக்கு இருந்தா சுராச்சியத்துக்கு, அட, உசிரைக் கொடுக்க வேண்டாம்டா. உசிரைக் கொடுக்க முன்வந்தவங்களுக்கு ஒரு ஆதரவா அநுதாபமா ஒரு வார்த்தைச் சொல்லி இருப்பீங்க? கேக்கறேன் முப்பதுலே இருந்து நாற்பத்தெட்டு வரைக்கும் வீட்டுக்கும் செயிலுக்கும் தாண்டா நடந்துக்கிட்டு இருந்தாரு.

அவரு வீட்டுலே எங்கே இருந்தாரு மாமா?

நீ சொல்றது சரிதான். தெக்காலே இருக்கிற ஆச்ரமத்திலேதானே பளியாக்கிடக்கறாரு. சோறு திங்கப்போற நேரம் தானே வீடு போவாரு. அடே, மகாத்மா காந்தியை நீங்க பார்த்திருக்க மாட்டீங்க. நம்ம ஊருக்கு வந்ததில்லே... நானே மருதையிலே போய் அத்தாம் பெரிய சன சமுத்திரத்திலே எங்கேயோ ஒரு மூலையிலே நிண்ணு கும்பிட்டுட்டு வந்தேன். நம்ம ஊருக்கு இவருதாண்டா மகாத்மா. அவருக்குப் போய் நாம புத்தி சொல்றதா? புத்தி சொல்லணும்னு சொல்றீங்க?

சித்தெ இருங்க ஒலி பெருக்கிலே, சொல்லப் போறாங்க...

வீராசாமி நாயக்கர் 987
துரைசாமி நாயக்கர் 1048
சத்தியநாதன் 99

பார்த்தியா நான் அப்பவே சொன்னேனே.

இப்போ நாம லீடிங்.

ஆ பெரிய லீடிங்!

அடுத்த அரைமணிலே அங்கிட்டு சாயப் போகுதுபாரு.

அட முள்ளு அங்கிட்டும் இங்கிட்டும் கடைசிவரைக்கும் எத்தினி வாட்டி சாயப் போகுதோ.

அட, அது சரி, சாஞ்சாலும் மூணும் பக்கம் சாயாதே.

அதான் தெரியுதே, இன்னும் ரெண்டு ஸ்தானத்துலேயேதானே நிக்குது.

நிக்கட்டுமே. அதனாலே என்ன தம்பி. இது வரைக்கும் வளமை, இது இல்லாட்டி அது இப்படித்தானே. அவுக கட்சி பலம் பார்த்துக் கிட்டு இருக்காங்க. பள்ளிக்கூடத்திலே பையங்க 'டக் அப் வாரு' 'அதான் கயிறு இழுக்கிற போட்டி' அது மாதிரி ஒருதரம் இவுங்க இன்னொரு தரம் அவுங்க.

ஆமாம் இவருதான் ஒருத்தர் பக்கம் இருந்துக்கிட்டு இருந்தாரே...

ஆமாம் சுயராச்சியம் வந்து நமக்கெல்லாம் ஒட்டுரிமை வந்திச்சா இல்லையா. அப்போ எல்லாரும் மஞ்சப்பெட்டிக்கு சாரிசாரியா போய் ஓட்டுப் போடவச்சாரு அவரு. அவரு பேச்சுக்கு நம்ம வட்டாரத்துலே மறு பேச்சு ஏது? மனுசன் தன் உடம்பை செருப்பாத் தச்சு இந்த வட்டாரத்துக்கு உழைச்சவராச்சே. தம்பி, நீ இண்ணைக்கு என்னவோ ஹரிஜன முன்னேற்றம், சலுகை இதெல்லாம் பேசுறீங்களே. அதைச் செய்வோம் இதைச் செய்வோம்னு எலக்ஷன் டயத்திலே வந்து கூட்டம் போட்டு கத்திட்டுப் போறீங்களே. அந்த காலத்திலே கையிலே எண்ணையும் சீக்காயும் எடுத்துக்கிட்டு சேரிக் குள்ளாற போய் அசுத்தமாக இருக்கிற குழந்தைகளுக்கெல்லாம் குளிப்பாட்டிவிட்டு சிலேட், பென்சல் வாங்கிக் கொடுத்து எழுதப் படிக்கச் சொல்லித் தந்தவரு அவருதான் தம்பி. அதுக்காக அவரு இனத்தாங்க அவரை ஒதுக்கி வச்சுட்டாங்க, தெரியுமா? தன் ஆசிரமத்திலேயே தன் கையாலேயே பொங்கிச் சாப்பிட்டவரு... தெரிஞ்சுக்க.

பின்னே அப்படி ஊருக்கு உழைச்சவரு சொன்னபடிதானே நீங்க ஓட்டுப்போட்டு இருப்பீங்க?

அவரு சொல்லாட்டி இந்த வட்டாரத்திலே மஞ்சப் பெட்டி ரொம்பி இருக்குமா?

ஆமாம் பாட்டையா இவரு நிக்கல்லியா?

அதான் நீ இந்நேரம் கேக்கல்லியேன்னு நினைச்சேன். அவரை நிக்கச் சொல்லித்தான் ஊரே காலிலே விழாக்குறையா கெஞ்சிக் கேட்டுக்குட்டுது. அவரு சொன்னாரு, காந்தி சுதந்திரத்தை வாங்கி இந்தான்னு நம்ம கையிலே கொடுத்துட்டுப் போயிட்டாரு காப்பாத்திக்கன்னு. அது மாதிரி காப்பாத்திக்கிற வேலையை மத்தவங்க கையிலே இவரு கொடுத்துப்போட்டு, நீங்க எப்படி காப்பாத்தறீங்கன்னு பாத்துக் கிட்டு இருக்கப் போறேன்னு சொல்லி சர்வோதயத்துலே சேந்துட்டாரு. எனக்கு போராடத்தான் தெரியும், இருபதுவருஷமா அதுதான் பழக்கம். அரசாள வேறே ஆளுக விஷயம் தெரிஞ்சவங்க வரட்டும்னு ஒதுங்கிட்டாரு காந்தி செத்ததுலே அவருக்கு மனசு முறிஞ்சு போச்சு. நம்ம பக்கத்துக்கு நிர்மாணத் திட்டம்னு அவரு; அவருன்னு நிர்மாணத்திட்டம். அப்படி பிரிக்க முடியாதபடி ஆயிருச்சு.

அப்படி ஒதுங்கி இருந்தவரு இப்போ ஏன் திடீர்னு...

கொஞ்சம் இருங்க ஒலிபெருக்கியிலே...

வீராசாமி நாயக்கர் 2188

துரைசாமி நாயக்கர் 1976

சத்யநாதன் 201

பாத்தீங்களா தராசு மாறி மாறி சாய்கிறதை?

அவுக அவுக சில வட்டங்களை பிடிச்சு வச்சிருப்பாங்கள்ளே.

ஆமாம் ஒரு இடத்திலே பணம்.

இன்னொரு இடத்திலே சாதி.

இப்படி... இப்பத்தான் என்ன், விஷயத்துக்கா ஓட்டு போடறாங்க.

எல்லாம் ஆளு செல்வாக்குக் குத்தானே?

இல்லாட்டி பிரசாரபலம் ஏதாவது ஒண்ணு.

பாவம் சத்யநாதன் டெபாசிட்டாவது தப்பிச்சுதுன்னு.

அவருக்கு டெபாஸிட் தப்பாட்டி என்ன முழுகிப் போச்சு தம்பி, கேவலம்னு தானே சொல்ல வாரீங்க. ஆமாம் உங்க பார்வையிலே அது தோல்விதான். ஆனா அவரு சத்யாக்ரகியா இருந்தவரு, இன்னும் நம்ம நடுவிலே அந்த வாழ்க்கை வாழுற ஒரே ஒருத்தரு. அவர் அடிக்கடி சொல்வாரு, காந்தி சொல்வாராம். ஒரு சத்யாக்ரகிக்கு தோல்வியே கிடையாதுன்னு. ஏன், வெற்றியும் கிடையாதும் பாரு இவரு. தோல்வியும் வெற்றியும் ஒரு பிரச்னைக்கு இரண்டு பக்கங்கள். ஒருவருக்குத் தோல்வி மற்றவருக்கு வெற்றி. அதனாலே வெற்றி மமதை ஏத்தி விடும். அதனால் சத்தியாக்கிரகி சத்தியம் ஜயிச்சுதுன்னு நினைப்பானே தவிர தான் செயிச்சதாக நினைக்க மாட்டான் என்பாரு. அதே போலே இப்போது அவர் தோற்றுல்--நீங்கள் எல்லாம் அவரு நிச்சயமாக டெபாஸிட் இழப்பார்னு தானே நம்புறீங்க-அவர் அதை தோல்வியாக நினைக்கமாட்டாரு தம்பி. அவரே சோர்வும் வீழ்ச்சியும் தொண்டருக்கு இல்லை என்னு பாரதி வரிகளை சொல்லிக் கிட்டே இருப்பாரு. அவரு ஒரு தொண்டரு. அவருகிட்டப் போய் தோத்துப் போனதுக்கு துக்கம் கேட்டீங்கன்னு, தொண்டு செய்ய விரும்பினேன் வாய்ப்புக் கிடைக்கல்லே. அடுத்த வாய்ப்புக்கு காத்துக்கிட்டு இருப்பேன்னுதான் சிரிச்சுக்கிட்டு சொல்வாரு.

ஆமாம் பாட்டையா, நான் முதக்க கேட்ட கேள்விக்கு நீங்க பதில் சொல்லல்லீங்களே.

தம்பீ, ஞாபகம் இருக்குது எனக்கு. அப்படி ஒதுங்கி இருந்தவர் ஏன் திடீர்னு இப்போ... அதானே கேட்டே நானு பதில் சொல்றதுக்குள்ளே நீ தான் ஒலிபெருக்கி பக்கம் காதை திருப்பிக்கிட்டே. இவிங்க வேறே ஏதோ பேச்சை திருப்பிட்டாங்க. மஞ்சப் பெட்டிக்கு ஓட்டுப் போடச் சொல்லி ஒரு தடவை செயிக்க வச்சவரு அடுத்த தடவை அவருடைய ஆதரவை அவுங்க கேட்ட போது, என் ஆசிரமத்திலேயே நான் இருந்துக்கிட்டு என் வாழ்த்தை உங்களுக்கு கொடுக்கிறேன்னு சொன்னாரு. அவுங்க • திகைச்சுப் போனாங்க. காரணம் கேட்டாங்க. அவர் சிரிச்சுக்கிட்டு, காரணம் எதுவும் இல்லே. எதிர்பார்த்து ஏமாற வேண்டாம் என்கிறதுக்காகத்தான்னாரு. கேட்டவங்களுக்கு புதிதாக இருந்தது. காந்தி வழியிலே போகிறதுக்கு என் ஆசிரம வேலையே போதும்னாரு. அப்போதான் அவுங்க கொஞ்சம் புரிஞ்சுக்கிட்டாங்க. பேசாம போயிட்டாங்க. போறபோது இவரு ஆதரவு இல்லாட்டி செயிக்காதாக்கும்னு மனசிலே சொல்லிக்கிட்டுப் போனாங்க. அவரோட ஆதரவு இருப்பதாக வெளிக்குச் சொன்னாங்க. செயிச்சும் போட்டாங்க.

இருங்க பாட்டையா ஒலிபெருக்கியிலே...

வீராசாமி நாயக்கர்	3458
துரைசாமி நாயக்கர்	2986
சத்யநாதன்	738

அட, முதக் குதிரைதான் சயிக்கும் போலிருக்கு.

லீடு இருந்துக்கிட்டே இருக்கு.

மூணாம் குதிரையும் கொஞ்சம் எகிறுது டோய்.

அட அதுதாபத்துலேயாவது ஒன்னு ரெண்டு விழுமப்பா.

ஆமா, ஆமா, உங்க அனுதாபத்தை அட்வான்ஸா கொடுத்திடுங்க. ஏன்' அவரும் அங்கிட்டு ஓட்டு எண்ணுகிற இடத்திலே தானே இருக்காரு. ஓட்டு எண்ணி முடியவும், வெளியே வரப்போ எதிர் கொண்டிட்டுப் போய் கொடுக்கலாம். எதிர்பார்த்துக்கிட்டு இருப்பாரு. தெரியுமா தம்பி உங்களுக்கு முன்னாடியே அனுதாபம் கிடைச்சது அவருக்கு.

அவருக்கு அனுதாபமா?

ஆமாம், தம்பி ஆமாம். அந்த கதை விவரம் வேணுமா கேளு. மூணாம் தடவை தேர்தல் வந்தப்போ... முதல் தடவை அவரைக் கேட்டுக்கிட்டு அவர் சொன்ன ஆளை நிறுத்தினாங்க. இரண்டாம் தடவை அவுங்களுக்குள்ளவே ஒரு ஆளை தீர்மானிச்சுக்கிட்டு உங்க சம்மதம் வேணும்னு கேட்டாங்க. மூணாம் தடவை ஆளை நிறுத்திப் போட்டு உங்க ஆதரவு வேணும்னு கேட்டாங்க. அப்போதான் அவர் பளிச்சுனு முகத்துக்கு நேரே சொன்னாரு. என் ஆதரவு உங்களுக்கு இல்லே. குண்டை தூக்கிப் போடவும் அவுங்க அசந்துட்டாங்க. அவரு காரணம் சொன்னாரு. நுனி நாக்குலே கசப்பு ஏறினா லெகுவாக அதை மாத்திக்கிட முடியும் உடனே. ஆனா அடி நாக்கு வரைக்கும் கசந்து போயிட்டிருக்கு. இந்த பத்து வருசத்துலே. நான் அழிஞ்சுபோய் என் வேலை நடந்துக்கிட்டு இருந்தாக்கூட எனக்கு திருப்தி. இப்போ வேலை நடக்காம அழிஞ்சு போய் நான் நடந்துக்கிட்டு இருக்கேன். சத்யாக்ரகிக்கு தக்க இடம் சர்வோதயம்னு தெரியுது. சர்வோதயத்தை கண்ணாடிப் பெட்டிக்குள்ளே இருக்கிற காட்சிப் பொருளாக ஆக்கிட்டீங்க என்கிறதும்கூட நாய்க்கு கெட்ட பெயரைக் கொடுத்து தூக்கிலிடுன்னு பழமொழி. சர்வோதயத்துக்கு நீங்க கெட்ட பெயர் கொடுக்கல்லே. கவுரமான இடம், மதிப்பு கொடுத்து ஐயோ பாவம் அப்பாவி காந்திக்காரங்க இன்னும் அங்கங்கே இருந்து ஏதோ செய்துக்கிட்டு இருக்காங்க. நம்ம காரியத்துக்கு அவுங்களாலே இடைஞ்சல் இல்லேன்னு ஒரு அனுதாபத்தைக் கொடுத்துக்கிட்டு வந்திருக்கீங்க. சர்வோதயத்துக்கு அது தாபம் தேவையில்லே. அது காந்தி வச்ச பேரு. அது இன்னைக்கு இங்கே ஆண்டுக்கிட்டு இருக்க வேண்டியது. அதுக்கு வகையில்லாம கையொடிச்சுப் போட்ட மாதிரி இருக்கு... எனக்கும் உங்களுக்கும் வெகுதூரம், போய்வாங்க ன்னு அனுப்பிட்டார்.

அப்புறம்?

அதுகூட அவுங்களுக்கு லச்சியமா இல்லை. அவராலேஎத்தனை ஓட்டு கிடைச்சுடப்போகுது இப்போ காலமே மாறிப் போச்சு. ஏதோ பெரிய வராச் சேன்னு கேட்டாக்கா சிரிச்சுக்கிட்டுப் பேசறாரு போறாருன்னு போயிட்டாங்க ஆனா அவுங்களுக்கு பெரிய அதிர்ச்சி காத்துக்கிட்டு இருந்தது. மறுவாரம் அவர் எதிர்க்கட்சிக்காரருக்கு ஓட்டுக்கேட்டு பிரசாரம் செய்யவும் உக்கார்ந்து போனாங்க.

என்ன? தான் முதக்க செயிக்க வச்ச கட்சி, பிறகு வாழ்த்தோடு நிறுத்தி வெற்றி பெற்ற கட்சிக்கு எதிராகவா?

ஆமாம் தம்பி ஆமா. எனக்கே திகைப்பாத் தான் இருந்திச்சு.

இருங்க பாட்டையா ஒலிபெருக்கியிலே

வீராசாமி நாயக்கர்	4200
துரைசாமி நாயக்கர்	3118
சத்தியநாதன்	2716

என்னது! என்னது!

முத ரெண்டு பேருக்கும் கணிசமா ஏறல்லே.

சத்தியநாதனுக்கு ஒரே அடியாக ஏறிடிச்சு!

சாமீன் புழைச்சிக்கிடும்.

சரி, பாட்டையா பிறகு?

அவர் எதிர்க்கட்சிக்காரருக்கு ஓட்டுப் போடுங்கன்னு சொன்னபோது ஊரு, இந்த வட்டாரமே திகைச்சுப்போச்சு, அவரு அவுங்க கட்சி மேடை மேலே ஏறிச் சொல்லல்லே. அவுங்க சமயத்தை உபயோகிச்சுக்கிட அவரை கூப்பிட்டாங்க காரைக் கொண்டாந்து. அவர் மறுத்துட்டாரு. என் ஆதரவு உங்களுக்குத் தான், ஆனால் உங்க ஆதரவை நான் எதிர்பார்க்கல்லே. பத்து வருசமா எதிர் பார்த்து

ஏமாந்துபோன கசப்பு இருக்கு. புதுசா எதிர் பார்த்து கசப்பை மேலே ஏற்றிக்க விரும் பல்லே. நீங்களாவது எதாவது செய்வீங்களா செயிச்சுன்னு பாத்துக்கிட்டு இருப்பேன். ஒரு அப்பாவி சத்தியாக்ரகி, சர்வோதயக்காரன், இப்போ வேறே என்ன செய்ய முடியுமின்னு சிரிச்சுச் சொல்லி அனுப்பி விட்டாரு. தானே பிரயாணம் செய்து நம்ம தொகுதி பூராவும் பிரசாரம் செய்து பேசினாரு. அவரு சொன்னாரு நான் சர்வோதயக்காரன். கட்சிக்காரன் இல்லே காந்திக்காரன். வேறே எந்த கொள்கைக்கா ரனும் இல்லே. நான் இருக்கிற வாழுகிற இந்த ஊர் சுகமாக இருக்கிறதா என்கிறதை முதல்லே பார்க்க விரும்புகிறேன். அப்புறம் தான் வெளி உலக விவகாரம். பத்து வருசமா நடந்த தை பார்த்த பிறகு ஒரு மாறுதல் செய்து பாத்தா என்னன்னு பட்டுது. அதனாலே உங்களைக் கேட்டுக்கறேன், புதுசா ஏதோ செய்கிறேன்னு வருகிறவங்களுக்கு ஒரு சான்ஸ் கொடுத்து பார்ப்போம்னு பேசினாரு. அவர் சொன்னதை கேட்டுப்போட்டு அப்படியே பொல பொலன்னு ஓட்டுகளை அவர் சொன்ன பொட்டிக்கே போட் டுட்டாங்க.

அவரு ஒருத்தரு சொல்லி அப்படியா நடந்தது!

சுத்தமான மனுசன் பேச்சுப்பா அது!

அவருக்குன்னு ஒரு செப்புச்சல்லி கிடை யாதப்பா.

சத்தியத்துலே புடம் போட்டு எடுத்த உடம்புப்பா அது. செயிச்சவங்க அவருக்கு ஜண்டையாப்போய் மாலை போடப் போனாங்க. அவரு சிரிச்சுக்கிட்டாரு. நீங்க எனக்கு ரோசாப்பு மாலை கொண்டாந்து போட வந்தி ருக்கீங்க. அதை அப்படியே உங்ககிட்டே வச்சிக்குங்க.

அப்போ அவர் சர்க்காவிலே நூற்றுக்கிட்டு இருந்தாரு. ஒரு சிட்டம் போட்டு முறுக்கி வச் சிருந்தாரு. அதை எடுத்து பிரிச்சு நான் உங்க கழுத்திலே இதைப் போடறேன்னு செயிச்ச அபேட்சகர் கழுத்திலே போட்டாரு. முதத் தடவை அவரு செயிக்க வச்ச ஆளுக்கும் இதே மாதிரித்தான் செய்தாரு. அந்த ரெண்டு ஆளுக யாருன்னு நினைக்கிறிங்க? இப்போ முதக்க பேர் சொல்லறாங்களே அவுங்க ரெண்டு பேருந்தான்.

என்ன! தான் முன்னே செயிக்கவச்ச அதே ஆள்களோடேயா அவரு இப்போ போட்டி போடறாரு?

இல்லை. நீங்க சொல்லறது தப்பு.

தங்களை செயிக்க வச்சவரோடே அவுங்க ரெண்டு பேரும் போட்டி போடறாங்க.

சரியான காரியம் இல்லீங்க அவுங்க செய்யறது.

ஏன் அப்படிச் சொல்லறீங்க?

இவுக ரெண்டு பேரும் அவருக்கு இடம் விட்டிருக்கனும்.

இவுகதான் பதவிலே இருந்தாச்சே?

நீங்க ஒண்ணு. இப்போ பதவிக்கு மட்டுமா ஆசைன்னு நினைக்கிறீங்க?

அதில்லே, எந்த கட்சி பிடிச்சுக்கிறதுன்னு தானே போட்டி.

ஆமா, அப்படி இருக்க கட்சிகள் தங்க ஜம் பத்தை விட்டுக் கொடுக்குமா?

அதுவும் ரெண்டு பேரும் வட்டாரத்திலே பெரிய புள்ளிக. செல்வாக்கு உள்ளவங்க. நல்ல தும் செய்ய முடியும் கெட்டதும் செய்ய முடியும்.

அப்போ பிள்ளைப் பூச்சியாலே என்ன செய்ய முடியும்னு நினைச்சிருப்பாங்க.

கொஞ்சம் பேச்சை நிறுத்திக்கிடுங்க, அதோ மைக்கிலே.

வீராசாமி நாயக்கர்	5102
துரைசாமி நாயக்கர்	5206
சத்யநாதன்	4436

என்னங்க ஆச்சர்யமா இருக்குது!

தராசு மறுபக்கம் சாயுது!

அதைத் தொடர்ந்து மூணும் பக்கம் வேறே தொடர்ந்து வந்துக்கிட்டு இருக்கு.

சத்யநாதனுக்கு இவ்வளவு ஓட்டு வருதே.

ஆமாம். ஆச்சரியமா இருக்குதுல்லே. பிள்ளைப்பூச்சிக்கு இவ்வளவு ஆதரவான்னு தானே ஆச்சரியப்படுறீங்க. ஆமாம் அவர் பிள்ளைப்பூச்சியாத்தான் இருந்தாரு. புலியாப் பாய வச்சுட்டாங்க.

அதெப்படி பாட்டையா?

கேட்டிருக்கியா தம்பி ஒரு கதை. ஒருத்தன் தன் பொண்ஜாதி சோம்பேறியா இருந்தா, படுத்துக்கிட்டே கிடப்பாண்ணு கொஞ்சம் சுறு சுறுப்பா இருக்கிற ஒரு பொண்சாதியை கட்டிக் கிட நினைச்சுக்கிட்டு ஒருத்தியை கட்டிக்கிட் டான். மத்தவங்க கேட்டாங்க எப்படியப்பா குடும்பம்னு. அவன் சொன்னானும். பரவா யில்லே அவ படுக்கையிலே படுத்துக்கிட்டே கிடப்பா. இவ படுக்கையிலே ஏந்திரிச்சு உக் காந்துக்கிடுதா என்றாரும்.

அந்த மாதிரித்தானே ஆச்சு இப்பவும். அஞ்சு வருசம் இவுக வந்துஎன்ன பண்ணினாக.

இந்த கேள்வியைத்தான் அவருகிட்ட போய் ஒவ்வொருத்தரும் கேட்டாங்க அடுத்த தேர்தல் வரவும். வரப்போகுதே தேர்தல் நீங்க அதுலே யாரை ஆதரிக்கப் போகிறீங்க. நாங்க யாருக்கு ஓட்டுப் போடனும்னு. நான் அதைப் பத்தி இப்போ எதுவும்நினைக்கல்லேன்னுட்டாரு முதல்லே. பிறகு கொஞ்சம்தூண்டி கேட்டப்போ இந்த வாட்டி நான் ரெண்டுபேருக்குமே ஆத ரவு தரப் போறதில்லேன்னு சொல்லிட்டாரு. பழைய கட்சிக்காரங்க வந்தாங்க. நீங்கதான் மறுபடியும் எங்களுக்கு ஆதரவு தரணும்னு கேட் டாங்களாம். மறுபடியும் கோட்டையை புடிச்சு பழைய மாதிரியே செய்யவா? முடியாதுன் னுட்டாராம். பிறகு இவுக வந்தாங்களாம். இன் னொரு சான்ஸ்கேட்டு. ஒரு சான்ஸ்லே இருபத் தைந்து சதவீதம் ஏதாவது செய்துட்டு இருந் தாக்க உங்களுக்கு என் ஆதரவுகிடைச்சிருக்கும். இப்போ என்னை மன்னிக்கவும். என் ஆச்ரமம்

(27ம் பக்கம் பார்க்க)

ஆராய்ச்சி

இலக்கியத்தில் கண் வர்ணனை

செல்வம்

[இக்கட்டுரை நான்கு பிரிவுகளை உடையது. ஒன்று: சங்ககாலக் கண் வர்ணனையை ஆராய்கின்றது. இரண்டு: அதைத் தொடர்ந்து 19-ஆம் நூற்றாண்டு வரை பயின்ற கண் வர்ணனையை ஆராய்கின்றது. மூன்று: இந்த இரண்டு காலப் பிரிவுகளில் கண்ணுவமைகள் எவ்வெவ்வாறு வழங்கின என்று தொகுத்துரைக்கின்றது. நான்கு: தற்காலத்தில் கண் வர்ணனையை வல்லிக்கண்ணனின் 'உன் கண்கள்' என்னும் கவிதையை எடுத்துக்கொண்டு ஆராய்கின்றது.

இந்த நூற்றாண்டிலேயே பாரதி போன்றோரின் கவிதைகள் இருக்க வல்லிக்கண்ணனின் கவிதையை மட்டும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டதற்கு ஒரு விளக்கம் கொடுக்கத்தான் வேண்டும். இந்த விளக்கத்தில் முதலில் சொல்ல வேண்டியது இக்கட்டுரையின் தூண்டலே இக் கவிதைதான் என்பது. எழுத்து 97-ஆம் இதழில் இக்கவிதையைப் படித்தேன். அது மரபை ஒட்டியதாகவும் அதே சமயத்தில் புதுமையானதாகவும் பட்டது. அதனுடைய புதுமையினையும் மரபையும் முடிவுகட்ட தமிழ்க் கவிதையில் கண்வர்ணனை வழக்கைப் பற்றிய அறிவு தேவைப்பட்டது.

இலக்கியத்திலே புதுமை மரபு என்ற வேறுபாடு முக்கியமானதல்ல, பரிணும வளர்ச்சிதான் முக்கியம் என்று தோன்றிற்று. எனவே, ஒரு கவிதை மரபானதா அல்லது புதுமையானதா என்று கேட்பதைவிட அது இலக்கியப் பரிணும வளர்ச்சியில் எவ்வளவு தூரம் துணை செய்கின்றது என்றுதான் கேட்கவேண்டும். இக் கேள்விக்கு விடை காணவும் மேற்கூறிய அறிவு தேவைப்பட்டது. கவிதையைப் பற்றிய மறு சிந்தனைகள் தோன்றுகின்ற இக்காலத்தில், கவிதையின் சிறப்பை மரபு அல்லது புதுமை என்னும் அளவுகோல் கொண்டு மதிப்பிடும் இக்காலத்தில், புதுமையிடத்தில் ஆசை பிறந்து விட்ட இக்காலத்தில், இந்த அறிவு பயனுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கை எழுந்தது. எனவே, சங்ககாலம் தொட்டு சென்ற நூற்றுண்டு வரை பயின்று வந்துள்ள கண் வர்ணனையை இக்கட்டுரையின் முதல் மூன்று பிரிவுகளில் ஆராய்ந்தேன். இம்மூன்று பிரிவுகளும் நான்காம் பிரிவுக்கு அடித்தளமாக அமைபவை என்றே கூறலாம். ஏனென்ருல் இவற்றிலிருந்து தெரிந்த செய்திகளைப் பகைப் புலமாகக் கொண்டுதான் நான்காம் பிரிவில் உன்கண்களை ஆராய முடிந்தது.

இக்கட்டுரை உன்கண்களை நேரடியாக ஆராய்ந்து மதிப்பீடு செய்யும் அதே வேளையில் மரபுக்கும் புதுமைக்கும் உள்ள தொடர்பையும், புதுமை எப்படியெல்லாம் மலரும் என்பதையும், மரபு எவ்வாறெல்லாம் பின்தொடரும் என்பதையும், எவ்வகையிலெல்லாம் புதுமையைப் புகுத்தலாம் என்பதையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டிச் செல்கின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

கண்வர்ணனை ஆராய்ச்சி பரந்தது, ஆழமானது. அதை நான் முழுவதும் முடித்துவிட்ட எண்ணவில்லை. என்னுடைய நோக்கிற்குத் தேவையான அளவே முதற் பிரிவுகளில் ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவித்துள்ளேன். இவையே எனக்குப் போதும்.

இக்கட்டுரையில் அங்கங்கே குறிப்பிட்டுள்ள நூல்களோடு நம்பியகப்பொருள்' தஞ்சைவாணன் கோவை, தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் சில பகுதிகள், யாப்பருங்கல விருத்தி, எழுத்துவின் பல்வேறு இதழ்களும் இதையெழுதி முடிக்கத் துணைபுரிந்தன என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்—செல்வம்.]

ஒன்று: சங்க காலம்

சங்ககால கண்வர்ணனை வழக்கை ஆராயப் பின்வரும் நூல்களை நான் பயன்படுத்தினேன் :-

1. பத்துப்பாட்டு
2. அகநானூறு [அக]
3. குறுந்தொகை [குறுந்]
4. கலித்தொகை [கலி]
5. நற்றிணை [நற்]
6. ஐங்குறுநூறு [ஐங்]
7. பரிபாடல் [பரி]
8. திருக்குறள் [குறள்]
9. சிலப்பதிகாரம் [சிலப்]

புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறத்தைச் சார்ந்தவை என்பதால் அவற்றை நான் நீக்கி விட்டேன். ஆனல் பத்துப்பாட்டு முழுவதும் பார்த்தேன்; ஏனென்ருல் இடையிடையே நிறைய வர்ணனை வருகின்றன என்பதால்.

புறத்தையும் பதிற்றுப்பத்தையும் நீக்கி விட்டு அவைகளுக்குப் பதிலாகச் சங்க காலத்தைச் சார்ந்த ஒரு காப்பியமான சிலம்பையும், மூன்றிலொரு பங்கு அகத்தைப் பேசும் அற

நூலான குறளையும் எடுத்துக் கொண்டேன். கடைச் சங்ககாலம் முடிவுறுவதாகக் கருதப்படும் கி. பி. இரண்டாம் நூற்றுண்டைத் தொடர்ந்து வந்த சில நூற்றுண்டுகள் இருண்ட காலமாகி எந்த இலக்கியத்தையும் வெளிக்காட்டாததால், இக்குறையை நீக்கவும் சிலம்பும் குறளும் துணை புரியும் என்று நம்பினேன். இன்னொரு வார்த்தை. வள்ளுவனையும் இளங்கோவையும் பார்க்காமல் இவ்வாராய்ச்சியை நான் முடிக்க விரும்பவில்லை.

சங்ககாலக் கண்ணுவமைப் பட்டியலைத் தருவதற்குமுன், ஒரு வர்ணனை வழக்கைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. பல புலவர்கள் பல இடங்களில் கண்ணுக்கு 'உண்' என்னும் அடை கொடுத்து 'உண்கண்' என்றே வழங்குகிருர்கள். மேற்சொன்ன ஒன்பது நூல்களிலும் இத்தொடர் பரவிக் கிடக்கின்றது. அரியேர் உண்கண் (சிறுபாணுற்றுப்படை-215), அரி மதர் உண்கண் (கலி. 82, 91), மையுண்கண் (பரி. 9) என்று வெறும் வர்ணனை அடை மட்டும் பெற்று வருதல் ஒரு வகை. உவமை கொடுத்துச் சொல்லும் போதும் இத்தொடரைப் பயன் படுத்துவது இன்னொரு வகை : எ. கா.

1. குவளை உண்கண்—அக. 183, 285, 310, 138.
குறுந். 339
சிலப். கட்டுரை. 2

2. நெய்தல் உண்கண்—நற். 113, .ஐங். 181, அக. 10, 113.

இத்தொடரின் கவர்ச்சிக்கு அடுத்தபடியான கவர்ச்சியுடைய தொடர் 'மழைக்கண்' என்பது. இதுவும் பல நூல்களில் பயின்று வருவதைக் காணலாம்.

கண்ணுக்கு உவமையாக வருவன அ) சில வகை மலர்கள் (ஆ) சில கருவிகள், (இ) மான், ஈ) கயல், உ) மாவடு, ஊ) கூற்றம் மட்டுமே. இவற்றுள் சில பரவலான வழக்கையும், ஒன்றிரண்டு அரிய வழக்கையும் பெற்றவை.

அ. *சிலவகை மலர்கள்*

பல இடங்களில் சிறப்புப் பெயரின்றி பொதுப் பெயரான மலர் அல்லது பூ என்ற சொல் பயன்படுவதைக் குறிப்பிட வேண்டும். பூப்போல் உண்கண் [நற். 20, 325; குறுந். 101; ஐங். 16, 101], மலருண்கண். [பரி. 9, கலி. 27, 49], மலரன்ன கண் [குறள். 1119, 1142], மாமலர் நெடுங்கண் [சிலப். அரங் 170, கடல் 174, வேனில் 16, 118] என வருவதோடு, நிந்தை உவமையாகக்கூட

......மாண்ட
போதுறழ் கொண்ட உண்கண்—அக. 354

என்று வருகின்றது. இந்த நேரத்தில்,

மலர்காணின் மையாத்தி நெஞ்சே
இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று—1112.

என்னும் இலக்கிய நயம் பெற்ற குறளைக் குறிப்பிட்டுத்தான் தீரவேண்டும். கடைசியாக ஒரு சொல். இது விபரீத உவமையாகப் பயின்று வரும் இரண்டு அரிய இடங்களைச் சொல்வது பயன்தரும் என்று நினைக்கிறேன்.

1) கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
—திருமுருகாற்றுப்படை. 75.

2) கண்பாயல் பெற்றதுபோல் கணைக்கால
மலர்கூம்ப —கலி. 119.

இப்படிப் பொதுவாக இன்றி சில சிறப்புப் பெயர்களும் பயன்படுகின்றன. அவை குவளை, நெய்தல், நறவம், பித்திகம், தாமரை என்பவை.

1. குவளை ; பலரும் மிக அதிகமாகக் கையாளும் மலருவமை குவளையே. உவம உருபின்றி தொகை உவமையாக 'குவளை உண் கண்' என்று வருவதை இதற்குமுன் பார்த்தோம். எனவே அதை விடுத்து, விரி உவமையாக வருகின்ற பல இடங்களுள் சிலவற்றைப் பார்ப்போம். எ. கா.

1) குவளை யன்ன ஏந்தெழில் மழைக்கண்
—நற். 6.

2) ......உண்கண்
குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்
தொல்கவின் பெற்றன. —ஐங். 500.

இது நிந்தை உவமையாகவும் பின்வருவது போல் சில இடங்களில் தோன்றுகிறது :

காணின் குவளை கவிழ்ந்து நிலனேக்கும்
மாணிழை கண்ணெவ்வேம் என்று
—குறள். 1114.

இக்குறளோடு ஒப்பிட்டு மகிழக்கூடிய பகுதி ஒன்றை கீழே தருகிறேன் :

......குவளையும்
அஞ்சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது —ஐங். 299.

வழக்கமான உவமை உபமேயமாகவும், உபமேயம் உவமையாகவும் மாறி வருவதை விபரீத

உவமை என்பார். அதற்கும் சில எடுத்துக் காட்டுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன :

1) கண்ணென மலர்ந்த மாயிதழ்க் குவளை
—அக, 228.

2) குவளைக் கண்மலர் விழிப்ப
—சிலப். அந்தி. 76.

இம்மலரைக் குறிக்கும் வேறிரண்டு சொற்களும் பயன்படுகின்றன: (1) நீலம், (2) காவி.

நீலம் என்பது கடையெழுத்து குறைந்து 'நீலிதழ் உண்கண்' (கலி. 33) என்று வருவது மிகவும் அரிது. நீலம் வழங்கும் இடங்களுக்கு எடுத்துக் காட்டுகள் :

நீலம் பிணைத்தன்ன கண்—கலி. 96.
புரியவிழ் நறுநீலம் புரையுண்கண்
—கலி. 15.

கண்போல் நீலம்—நற். 273.
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து
எதிர்மலர்ப் பிணையல் அன்ன
அரிமதர் மழைக்கண்—அக. 149.

எட்டுத்தொகையில் காவி பயின்று வராவிட்டாலும் சிலம்பில் 'காவியங்கண்' (அந்தி. 46) என்று வருவதைக் குறிப்பிட வேண்டும். இதையே சில நூற்றுண்டுக்குப்பின் வந்த மாணிக்கவாசகர் 'காவி சேரும் கயற்கண்' (திருவா. 32) என்று எடுத்தாண்டு அதற்குப் புகழ் தேடித் தருகின்றார்.

2. நெய்தல் : குவளைக்கு அடுத்த நிலையில் அதிகமான செல்வாக்கு பெற்ற உவமை இது. முன்னதைப்போலவே இது தனியாகவும் அடையுடனும் மற்ற வகையிலும் பயின்று வருகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டுகள் :

1) நெய்தல் உண்கண்—அக. 10, 113;
ஐங். 181; நற். 113.

2) வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரி துடைய காதலி கண்ணே
—ஐங். 188.

3) ......நெய்தற்
போது புறங்கொடுத்த உண்கண்
—அக. 130.

4) கண்போல் நெய்தல்
—நற். 8; ஐங். 151.

3. நறவம் : கீர்ப்பூ வகையைச் சாராத வாசனைக் கொடி வகையினதான நறவத்தின் சிவந்த மலர் மிக அரிய வழக்காய் வருகின்றது. 'நறை நார்த்தொடுத்த வேங்கையங் கண்ணி' (புறம் 168) என்று மாலையைப்பற்றி வரும் இந் நறவமலர் பரிபாடலில் இரண்டு முறை தென்படுகின்றது. அவை வருமாறு ;

1) நயவரு நறவிதழ் மலருண்கண்—8.

2) பேர்மகிழ் செய்யும் பெறுநறப்
பேணியவே

கூர்நரு வார்ந்தவள் கண்—7.

4. பித்திகம் : பிச்சிச் செடியின் மலர் இது. ஒரே ஒரு இடத்தில் மட்டும் இது அரிதாகத் தோன்றுகிறது:—

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வரிந் உறழும் கொழுங்கடை
மழைக்கண்—குறுந். 222.

வேறெங்கும் இவ்வழக்கை நான் பார்க்க முடியவில்லை.

5. தாமரை ; இதைப் பொறுத்தவரை ஒன்றைச் சொல்லித்தான் ஆகவேண்டும். பொதுவாக இது கண்ணனுடைய கண்ணுக்குத் தான் உவமையாக வருவது வழக்கம். இதை இராமாயணத்திலும் பாரதத்திலும் மற்றும் விரவிக் கிடக்கின்ற திருமால் பாடல்களிலும் காணலாம். அதைத் தவிர சில வேளைகளில் ஆணின் கண்ணுக்கு உவமையாகலாம். பெருங் கதையில் உதயணனின் கண் 'தாமரைச் செங் கண்' என்று வர்ணிக்கப்படுவது ஓர் எடுத்துக் காட்டு.

ஆனால் சங்க நூல்களுள் கலித்தொகையில் 39-ஆம் பாடலில் மட்டும் அபூர்வமாக இது பெண்ணுக்குப் பயன்படுகின்றது :

காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சி......

இன்னொரு செய்தி. பொதுவாக மலர் அல்லது பூ என்றால் தாமரையைக் குறிப்பதாக இருந்தாலும், பெண்ணின் கண்ணுக்கு உவமையாக வரும்போது அதை உரையாசிரியர்கள் தாமரை என்னும் பொருளில் எடுத்துக்கொள்வதில்லை. எனவேதான் இதை அபூர்வ வழக்கு என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆ. சில கருவிகள்

இத்தலைப்பிலே நாம் பார்க்க வேண்டியவை, 1. அம்பு, 2, வேல், 3. வலை, 4. கயிறு, 5. பறை என்னும் ஐந்தாகும். பொதுவாகச் சொல்லப் போனால் இக்கருவிகளுக்கு மலர்களுக்குள்ள செல்வாக்கு இல்லை.

1. அம்பு: இதைக் குறிக்க ஏ, வாளி பகழி என்னும் சொற்களே பயன்படுகின்றன. இது சில நூல்களில் விரி உவமையாகவும் அடைநிரம்பவும் பெற்றும் வருகின்றது. எ. கா.

1) ஏ ஒத்து...பெருமழைக்கண்
—குறுந். 72.

2) செறுச்செய்த வாளி சீற்றத்
தவையென்ன நேரிதழ் உண்கண்—பரி.20.

3) ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்கண்—நற்.13.

2. வேல்: எட்டுத்தொகையில் அம்புக்குள்ள இடம்கூட வேலுக்குக் கிடையாது. அதன் ஆட்சியைக் குறளிலும் சிலம்பிலுந்தான் காண முடியும். ஒருமுறை 1113-ஆம் குறளில் 'வேலுண்கண்' என்று அரிதாகப் பயன்படும் இந்த வேலுவமை, சிலம்பில் பல இடங்களில் பரவிக் கிடக்கின்றது; என்றாலும் கயலைப்போல் அவ்வளவு செல்வாக்கு இதற்கில்லை இளங்கோவிடத்தில் என்றே சொல்ல வேண்டும். வேல் நெடுங்கண் என்றும் வேலரி நெடுங்கண் என்றும் வருவது வழக்கு; ஆனாலும் கானல் வரியில் ஒரு பாடலே மிகுந்த நயத்துடன் இது பயின்றுள்ளது.

கள்வாய் நீலம் கையின் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்,
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய.

இதே வேலுவமை பிற்காலத்தில் அம்பைவிட அதிக செல்வாக்கு பெற்றுவிட்டது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

3. வலை: இன்று கண்வலை என்று சாதாரணமாகப் பயன்பட்ட போதிலும், சங்க காலத்தில் இது அரிதாகவே தோன்றுகிறது.

நெடுங்கண் வலையால் உயிர் கொல்வை

என்று சிலப்பதிகாரக் கானல் வரியில் வரும் அடியுடன் மணிமேகலை வழக்கு ஒப்புநோக்கத் தக்கது.

செங்கயல் நெடுங்கண் சுறுக்கு வலை
—18 : 106.

4. கயிறு: வலையைப் போன்ற இன்னுமொரு அபூர்வ வழக்கு இது. பரிபாடலில் ஒரிடத்தில்,

மடமதர் உண்கண் கயிறாக வைத்துத்
தடமென்றோள் தொட்டுத் தகைத்து—20.

என்று மகளிர் சிலர் பரத்தையின் செயலைக் குறிப்பிடும்போது இயல்பாகத் தோன்றுகின்ற இந்த உருவகம் ஆழப்பதியும் தன்மை பெற்றது.

5. பறை: கயிற்றைப் போலவே அரிதாகவும் ஆனால் இடத்திற்கேற்ப இயல்பாகவும் தோன்றும் இந்தத் தொகை உவமை 1180-ஆம் குறளில் வருகின்றது:

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால், எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து.

நல்ல சத்துள்ள உவமைகள் ஒரு முறை தோன்றி, பின்பற்றுவாரற்று வழக்கொழிந்து போவதற்கு இதை ஓர் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

இ. மான்: பழம் புலவர்கள் விலங்கினத்தில் மானைத்தான் கண்ணுவமையாகப் பயன்படுத்தியுள்ளனர்.

வலைமான் மழைக்கண்—நற். 190.
பிணையெழில் மானோக்கி
—கலி. 27, 56, 87.

பிணையேர் மடநோக்கு—குறள். 1089.

என்று சில இடங்களிலே இது வழங்குகிறது. ஆனால் பிற்காலத்தில் இது மிகுந்த செல்வாக்கைப் பெற்றுவிட்டது என்பதையும் சொல்வது நல்லது.

ஈ. கயல்: குவளைக்கு இணையாகச் சங்க இலக்கியத்தில் தோன்றுவது இந்தக் கயல்தான். 'கயற்கண்' என்றும் 'கயனெடுங்கண்' என்றும் 'செங்கயல் நெடுங்கண்' என்றும் 'கருங்கயல் நெடுங்கண்' என்றும், 'அரிபரந் தொழுகிய செழுங்கயல் நெடுங்கண்' என்றும் இளங்கோவடிகள் ஆசையோடு சொல்லிக்கொண்டே போகிறார். வள்ளுவரும் ஒருமுறை 1212-ஆம் குறளில் 'கயலுண்கண்' என்கிறார் எட்டுத்தொகை நூல்களுள்,

கயலேர் உண்கண்—குறுந். 398.
கயலென அமர்த்த உண்கண்—அக. 126.
கயலெனக் கருதிய உண்கண்—ஐங். 36.

எனவும், கயலுக்குப் பதில் கெண்டை என்ற சொல்லுடன்,

ஒளிகிளர் உண்கண் கெண்டை—பரி. 16.

என உருவகமாகவும் இது தோன்றுகிறது.

உ. மாவடு: வடி, மாங்காய், மாழைஎன்னும் சொற்கள் பயன்படும் கண்ணுவமை சற்று அரிது என்றுதான் கருதவேண்டும். ஆனால்

பிற்காலத்தில் இது பெரும்புகழ் பெற்றுவிட்டது. ஏ. கா.

1) மாழை நோக்கி—அக. 116.

2) இள மாங்காய் போழ்ந்தன்ன கண்
—கலி. 108.

3) இரும்பீர் வடியன்ன உண்கண்
—கலி. 64.

இவற்ருேடு இலக்கிய நயத்துடன் வருகின்ற இவ்வரிகளை சேர்த்துக் கொள்ளவும்,

இரும்பீர் வடியொத்து மைவிளங்கும்
கண்ணெளியால்
செம்மைப் புதுப்புனல் சென்றிருள்
ஆயிற்றே—பரி. 7.

ஊ. கூற்றம்: இதனை வள்ளுவரும் இளங்கோவும் கையாள்கின்றனர்.

பண்டறியேன் கூற்றென் பதனை
இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமற் கட்டு—1083.

என்றும் வேறு சில இடங்களிலும் வள்ளுவர் பயன்படுத்த, இளங்கோ பல இடங்களில் கூற்றத்தை உவமையாகத் தருகின்ருர். ஒரே ஒரு நீண்ட நயமான எடுத்துக்காட்டு கீழே தருகிறேன்:

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
சொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்
—கானல். 21.

இரண்டு:
சங்க காலத்திற்குப் பின்

சங்க காலம் முடிவுறுவது கி. பி. இரண்டாம் நூற்ருண்டு. அதற்குப்பின் 17 நூற்ருண்டுகள் ஆகிவிட்டன. இந்த நீண்ட காலத்தில் எத்தனையோ நூல்கள் தோன்றிவிட்டன. அந்தனை நூல்களையும் ஆராய்வது என் நோக்கமல்ல. இந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வொரு நூற்ருண்டையும் வரிசையாக எண்ணிப்பார்த்து, ஒவ்வொன்றிலும் புகழ்பெற்ற ஒரு படைப்பையும், சில சமயங்களில் இரண்டு மூன்று படைப்புக்களையும் துருவிப் பார்ப்பதுதான் என் நோக்கமாகும்; இதுதான் என்னுல் நிறைவேற்றக் கூடியதுமாகும்.

சங்க காலத்தைத் தொடர்ந்த மூன்ரும் நூற்ருண்டிலிருந்து சில நூற்ருண்டுகளை இருண்ட காலம் விழுங்கி விடுகிறது. அதற்குப் பிறகு நிலவிய படைப்பாளிகளில் மாணிக்கவாசகர் 5 அல்லது 6 ஆம் நூற்ருண்டைச் சார்ந்தவர். இந்த காலத்திலிருந்து ஆரம்பித்து சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த பூண்டி அரங்கநாதர் காலம் வரை பல நூற்ருண்டுகளில் எழுந்து புகழ்பெற்ற 20 நூல்களைப் பார்த்தால், கண்ணுவமை ஆராய்ச்சியின் அடுத்த கட்டம் முடிந்துவிடும் என்று முடிவு செய்தேன். அந்த இருபது நூல்களை அவை எழுந்த காலத்துடன் கீழே தருகிறேன்;

1. V-VI: (1) திருக்கோவையார் (திருக்கோ) (2) திருவாசகம் (திருவா)

2. VI-VII: முத்தொள்ளாயிரம் (முத்தொள்)

3. VIII: பெருங்கதை (பெருங்.)

4. IX: நந்திக் கலம்பகம் (நந்தி)

5. X: சீவக சிந்தாமணி (சிந்)

6. XI: கலிங்கத்துப்பரணி (பரணி)

7. XII: (1) ராமாயணம் (ராம.) (2) தண்டியலங்காரம் (தண்டி.)

8. XIII: நளவெண்பா (நள.)

9. XIV: வில்லிபாரதம் (வில்லி)

10. XV: திருப்புகழ் (திருப்.)

11. XVI: (1) திருவிளையாடற் புராணம் (திருவிளை.) (2) நைடதம் (நைட)

12. XVII: (1) பிரபுலிங்கலீலை (பிரபு) (2) மதுரைக் கலம்பகம் (மதுரை) (3) மீனுட்சி அம்மைப் பிள்ளைத் தமிழ் (மீனு.)

13. XVIII: (1) காஞ்சிப் புராணம் (காஞ்சி) (2) திருக்குற்ருலக் குறவஞ்சி (குற.)

14. XIX: கச்சிக் கலம்பகம் (கச்சி)

1, திருக்கோவையார், திருவாசகம்:

இவற்றில் வரும் கண்ணுவமைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: பழையன; புதிய சொற்கள்; புதிய உவமைகள்.

பழைய உவமைகள் வருவதற்கு எடுத்துக்காட்டாக சில பகுதிகளைக் கீழே தருகிறேன்:

(1) மாவடு வகிரன்ன கண் - திருவா - அடைக்கலம்-6.

(2) போரார் வேற்கண் - திருவா - திருப்பொன் 1.

(3) மடமான் விழி-திருக்கோ. 12,22,25

இப்படி மாவடு, மான், அம்பு, வேல்,குவளை போன்ற உவமைகள் திரும்பத் திரும்ப பயன்படு கின்றன.

புதிய சொற்கள் சில வேளைகளில் பழைய உவமைகளையே திருப்பித் தருகின்றன. பொது வாகக் கயல் என்னும் சொல்லே சங்ககாலத்தில் பயன்பட்டாலும் கெண்டை என்னும் சொல்லும் பரிபாடலில் அபூர்வமாக வருவதைப் பார்த் தோம். இதைப் பல முறை மாணிக்க வாசகர் கெண்டையங்கண் என்னும் தொடரில் எடுத் தாள்கிறார். அதோடு சேல் என்னும் சொல்லை யும் புதிதாகச் சேர்த்து 'சேலேர் கண்' (திருவா- திருத்தெள்.14) என்றும் 'சேலன கண்' (திருவா படையாட்சி-3) என்றும் பாடிச் செல்கின்றார். இந்த வகையிலே பார்க்கக்கூடிய இன்னொரு சொல் 'படை' என்பது. இதற்கு அம்பு என் னும் பொருள் உண்டு என்றாலும் இதைப் புது உவமையாகக் கொள்வதே சிறந்தது என்று நினைத்து அதை அடுத்த வகையிலே சேர்த்துச் சொல்கிறேன். கருங்குவளையைக் குறிக்கும் 'பானல்' என்னும் சொல் 'பானல் தடங்கண்' (திருவா. திருப்பொற். 15) என்று வருவதும் உண்டு.

புதிய உவமைகள் இரண்டு இவற்றில் வரு கின்றன. ஒன்று, படை; அடுத்தது வாள். 'படைக் கண்' என்னும் தொடர் கோவையில் பலமுறை பயில்கின்றது. படை என்பதைப் பொதுப் பெயராகக் கொண்டு பொருளுரைக்கும் போது உவமையின் ஆழம் பெருகின்றது என் பது என் நினைப்பு. (ஒப்பிடுக : குறள் : 1082) பிறகு, வாட் கண் என்றும் வாட்தடங்கண் என்றும் சொல்லிஒருபுதிய உவமையைக் கூட்டு கிறார். கூர்ந்து விரையும் பார்வைக்கு அம்பென் றும், மின்னி விரையும் பார்வைக்குவேலென்றும் ஆனபிறகு பளபளத்துப் பலமுறை தாக்குகின்ற பார்வையைக் குறிக்க வாளை நினைத்தது தர்க்க ரீதியானதுதான். இதைச் சங்க காலப் புலவர் கள் எண்ணாதது வியப்பையே தருகிறது.

2. *முத்தொள்ளாயிரம்:* இதில் வரு கின்ற உவமைகள் மூன்றும் பழையனவே. வேற் கண் (30) மிகப்பழையது; வாட் கண் (33) அவ் வளவு பழையதல்ல; மூன்றாவதான பழமை சான்ற கயல், சற்று நீண்ட அடை பெற்று நய மாக விழுகிறது:

> நீல வலையில் கயல்போல் பிறழுமே
> சாலேக வாயில்தொறும் கண்—87.

இதன் கூரிய தாக்கு சக்திக்குக் காரணம் இவ் வரிகளில் வரும் மொத்த உருவகந்தான்.

3. *பெருங்கதை;* இது முன்னதை விடப் பல மடங்கு பெரிது என்பதனால் இன்னும் சில பழைய உவமைகள் கூடிவருவதுதான் மிச்சம். இவற்றில் முதலில் சொல்ல வேண்டியது வாளேர் கண் (III-நலன்-182). பிறகு, இணை மலர் நெடுங்கண் (III-கண்-32) குவளை யுண் கண் (III-இரவு-118), ஓடு கயலன்ன பெருங் கண் (III-புணர்வு-24), வேற்கண் (IV-பிரச்-46), வடிக் கண் (IV-வயா-8), அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண் (IV-பிரச்-66) என்று திரும்பவும் குறிப்பிட வேண்டியதுதான். உதயணன் கண்ணுக்கு வரும் தாமரை உவமை பற்றி முன்பே சொல்லி விட்டேன். கடைசி யாக இதை மட்டும் நான் சொல்வது நல்லதே :

> வில்லெனக் கிடந்த புருவம், வில்லின்
> அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்-
> IV பிரச்-66.

என்னும் மாலை உவமை.

4. *நந்திக் கலம்பகம்:* இதிலே குவளை, வாள், கயல் மற்றும் வேல் பயில்கின்றன. எடுத் துக் காட்ட வேண்டிய வரி : கிளரொளிய தெள் ளிலை வேற் கண் (56).

5. *சீவகசிந்தாமணி:* வாளும் படை யும் கண்ணுவமைகளாகி சுமார் ஐந்து நூற்றாண் டுக்குப்பின், இந்நூலிலே மற்றொரு உவமையான சிவந்த கழுநீர்ப் பூவைச் சிந்திக்கின்றோம். இப் பெரிய நூலுள் குறிப்பிடத் தகுந்தது பல்பொருள் உவமைக்குரிய எடுத்துக் காட்டு :

> வாளர் மதிமுகத்த வாளோ வடுப்பிளவோ
> தாளர் கழுநீரோ நீலமோ தாமரையோ
> நீள்வேலோ அம்போ கயலோ நெடுங்
> கண்ணோ
> கேளார்ந்த கூற்றமோ கொல்பார்—தொடங்
> கினவே—1972

ஐயத்தினால் எழுந்த இம் மாலை உவமையில் கவனிக்க வேண்டியவை புதிய கழுநீரும் பெண் விழிக்கு அபூர்வமான தாமரையுமே.

6. *கலிங்கத்துப்பரணி:* இச் சிற்றிலக் கியத்தில் கண்ணைப் பற்றிப் பேசுகின்ற கடைத் திறப்பில் பயில்பவை கயலும் வேலும் படையுந் தான். இவைப் பலமுறை நயமாக

> தங்குகண் வேல் செய்த புண்களைத்
> தடமுலை வேதுகொண் டொற்றியும்
> செங்கனி வாய் மருந் தூட்டுவீர்-35.

என்பது போல் வருகின்றன.

7. *ராமாயணம்:* இந் நீண்ட காப்பி யத்தில் பயில்பவை பெரும்பாலும் பழைய உவ மைகளே. அத்துடன் இளங்கோவின் காவி மலர் 'காவியோ கயலோ எனும் கண்ணிணை' என் னும் தொடரிலும், மாணிக்க வாசகரின் பானல்

மலர் பானலங் கண்கள் என்னும் ஆட்சியும் புத்துயிர் பெறுகின்றன. சில சமயத்தில் பழைய உவமையைக் குறிக்கும் புதிய சொல்லை ஆள்கிறார்: மான்போலும் விழி என்பதற்கு நவ்விபோல் விழி (அகலிகை .15) என்கிறார்.

கம்பர் தந்த சில புதிய உவமைகளும் உண்டு. 'கூற்றம் போலும் கொலைக் கண்' [எழுச்சி II] என்று கூறிக் கண்ணுக்குக் கொலை என்னும் தொழிலை உவமையாக்குகின்றார். இதைப்பற்றிய வேறு சில செய்திகளைப் பின்னால் பார்க்கலாம். மற்றோர் உவமை இடம் நோக்கி அழகாய் விழுந்து விட்டது என்பதையும் சொல்ல வேண்டும்:

... ...துணைக்
கண்ணெனும் நெடுங்கடல் கலுழி கான்றிட
திருவடி-46.

விபரீத உவமைக்குப் பல எடுத்துக் காட்டலாம். எத்தனையோ பாடல்களும் உண்டென்றாலும், ஒரு வரியுடன் நிறுத்திக் கொள்கிறேன்:

அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்த ஆடல்
மீன் IV-கார்-20.

மேலும், கம்பனிடத்தில் நயமான பகுதிகளுக்கும் குறைவில்லை.

ஒரே ஒரு எடுத்துக் காட்டு:
கழிய கூரிய என்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையும் நோக்கி
னான் I எழுச்சி. II

கடைசியாக அவனுடைய இலக்கியக் கழைக் கூத்தையும் குறிப்பிட வேண்டும்.

... ...வேலொக்கும் விழியென் றாலும்
நெல்லெக்கும் புல்லென் றாலும் நேருரைத்
தாகவற்றே III-சூர்ப்-42

தண்டியலங்கார எடுத்துக் காட்டுப் பாடல்களில் 'விழியே களி வண்டு' எனவும் 'கண் வண்டு' எனவும் ஓர் உவமை வருவதையும் சொல்லி விடுவது நல்லது.

8. நளவெண்பா: கெண்டைக் கண் (200), வேற்கண் (108) படை நெடுங் கண் (331) போன்றவை தான் இதில் வருகின்றன. புகழேந்திக்கும் கம்பரைப் போல் இலக்கியக் கழைக் கூத்து கை வந்தது என்றே சொல்லலாம். இவ்வரிகளைப் பார்க்க:

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்-
27.

9. வில்லிபாரதம்: இதன் வர்ணனைப் பகுதிகளில் அடிபடுவன பழைய உவமைகளே: வடுவேய்கண், மான்விரிக்கண், கயலைப் புறங் காணும் கண், பானலங்கண், முதலியன.

10. திருப்புகழ்: சங்க இலக்கியத்திற்கு 13 நூற்றாண்டுகள் கழித்தும், கழுநீர் உவமைக்குப் பின் 5 நூற்றாண்டுகள் சென்ற பின்பும் இன்றொரு புது மலருவமையை இங்கு சந்திக்கிறோம். அதுதான் குவளை, நெய்தல், காவி போன்ற நீர்ப் பூக்களைக் குறிக்கும் இனப் பெயரான அல்லி. திருப்புகழ் திரட்டில் 88 ஆம் பாட்டில் அல்லி விழி என்னும் தொடரில்தான் இது தலை காட்டுகிறது. இன்னொன்று, 53 ஆம் பாட்டில் 'நச்சுக் கண்' என்பதிலுள்ள நச்சு. இது கம்பரின் கொலைக் கண்ணில் உள்ள உவமையை விடச் சற்று தெளிவான புதுஉவமை என்றே சொல்லலாம். ஆனால் இது எவ்வளவு தூரம்.

... ...மாண்பில் நஞ்சும் அமுதமுமே
போல் குணத்த பொரு கயற்கண் சிந். 167

என்பதையும்,

விடத்தோ டமுதங் கலந்தென்ன மிளிறும்
வேற்கண்—வில்லி. திரௌ. 93

என்பதையும் தொகைத்துரைக்கிறது என்பதை ஆராய ஒரு தனிக்கட்டுரையே தேவைப்படும். கடைசியில் 'மாதர் வலைக்கண்' (152) என்பதையும் குறிப்பிட வேண்டும்.

11. திருவிளையாடல், நைடதம்: முதல் நூலில் அவ்வளவு புகழ் பெறாத மாணிக்கவாசகரின் 'படை விழி' யையும் (I-நாடு. 23) அருணகிரிநாதரின் 'நச்சு வாள் விழியையும் (1-தடாதகை 65) சந்திப்பதோடு, அலுத்துப் போன 'அங்கயற்கண்' (I-வாழ். 4) சேலை நேர் விழி (I-தடாதகை-85), வடிக்கண் (1-நகர்-48) முதலியவற்றையும் காண்கிறோம்.

நைடதத்தில் வேற்கண், வாள் கிடந்தனைய கண், வடு நெடுங்கண் முதலியன காண்பதுடன் கீழ் வருவதுபோன்ற நயமான வரிகளையும் படிக்கிறோம்:

வேலெனப் பிறழ்ந்து, கூற்றை வெல்குவன் வருக என்ற
ஓலை விட் டுலவுங் கண்.

12. பிரபுலிங்கலீலை முதலியன: இவற்றிலும் புதிதாக ஒன்றுமில்லை. பானலங்கண், வாள் விழி, மான் செயும் விழி, வடிவேல் மருட்டும் மதர் விழி (பிரபு). கயற் கண், வாட் கண், விழி வலை (மதுரைக்கலம்பகம்) போன்றவையே தென் படுகின்றன.

13. காஞ்சிப் புராணம், குறவஞ்சி: காஞ்சியில் வழக்கமான கயல்விழி, வாள் மருள் நெடுங்கண், என்பவைகளோடு 'மாதர் கண்

லை' (55) என்பதும் திரும்பவும் தலைதூக்கு கிறது. பிறழ்ச்சியைக் காட்டும் உவமைகளான சேல், கயல், முதலியவற்றோடு இதில் முதலாக வருகின்ற 'அலை விழி' (நகர். 8) என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

குறவஞ்சியில் பழைய உவமைகளைச் சற்று வியப்பைத் தரும் தொடர்களில் காணலாம் நெட்டழகு வாள் விழி (92), நெஞ்சைச் சூறையாடும் விழிக் கெண்டையாள் (18) இவற்றில் 'நெட்டை யிணை விழி' என்னும் திருப்புகழ் தொடரை நினைவூட்டலாம். கம்பரின் கூற்றம் போலும் கொலைக்கண் என்பதை ஒட்டி அமைந்துள்ள 'கொலை மதர்க் கண்' (50)என்பதையும் இங்கு குறிப்பிடலாம். வேல் என்னும் சொல்லுக்கு மாறாக ஈட்டி என்பது பயிலும் 'மடவார் கண் போல் ஈட்டி' என்பதையும் சொல்லத் தான் வேண்டும்.

14. கச்சிக் கலம்பகம் : இலக்கியப் புகழ் பெற்ற மலர் விழி (49) மான் கொண்ட கண் (75) முதலியவற்றோடு, மீன் வகையில் ஒரு புது வகையினையும் சந்திக்கின்றோம் :

வாளைக் கயலை நிகர்த்த வெங்கண்—10.

மூன்று :

உவமை வழக்கு

இம் மலருவமைகள் பல வகைகளிலே வழங்கி வந்துள்ளன. அவற்றை ஆராய்வதே இப்பகுதியின் வேலை.

1. விரியுவமை: அன்ன, புரையும் என்பவை போன்ற உவம உருபோடு வருவது—மலரன்ன கண்.

2. தொகை: அவ்வாறு உருபின்றி வருவது—மலர்கண்.

3. உருவகம்: கண் மலராக என விரிந்தோ; கண்மலர் என தொக்கோ வருவது.

4. நிந்தை: உவமையைவிட பொருள் மேலானது எனக் காட்டுவது—மலரை வென்ற விழி.

5. ஐயம்: குவளையோ, நெய்தலோ என்று பல உவமைகளை ஐயங் காரணமாக அடுக்குவது.

6. விபரீதம்: கண்போன்ற மலர் என்று தலைகீழாக மாற்றிச் செல்லுதல்.

7. அடை+உவமை+பொருள் அல்லது உவமை+அடை+பொருள்.

8. அடை+உவமை+அடை+உவமை.

9. பல்பொருளுவமை: இரண்டும், இரண்டுக்கு மேலும் உவமைகளை அடுக்குவது.

10. நயம்பட நீட்டல்: ஒருவமையைச் சற்று நீட்டி நயம்படப் பின்னுதல்.

11. இலக்கியக் கழைகூத்து: பலகாலம் பயின்றுள்ள உவமையின் புளிப்பை, புதிய வழிகளில் உரைத்து உப்பு கூட்டி ஈடு கட்டுதல்.

சங்ககாலம் :

இப் பதினோரு வகைகளில் பலவற்றைச் சங்க இலக்கியங்களிலேயே காணலாம். எடுத்துக் காட்டாக சில பார்ப்போம். முதலில்

நெய்தல்

1. நெய்தல் மலரன்ன கண்—கலி. 142.

2. 'நெய்தற்கண்' என்று வராவிட்டாலும் 'நெய்தல் உண்கண்' என்று பலவிடங்களில் வருகின்றது. உண்கண் என்பதை அடை+பொருள் என்று கொள்வதைவிட, வெறும் பொருளாகவே எண்ணுவது சிறந்தது.
—அக. 10, நற். 113, ஐங். 181.

3. இல்லை.

4. ....நெய்தற்
போது புறங்கொடுத்த உண்கண்
—அக. 130.

5. இல்லை.

6. கண்நேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்
—நற். 283.

7. இல்லை.

8. வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரி துடைய காதலி கண்ணே
—ஐங். 188

9. கயவாய நெய்தலலர் கமழ்முகை
மணநகை
நயவரு நறவிதழ் மதருண் கண் —பரி. 8

10. இல்லை.

11. இல்லை.

இல்லையென்று மேலே குறிப்பிட்டவைகளுக்கு சிறிது விளக்கம் தந்துதான் ஆகவேண்டும். முதலில், மூன்ருவது வகையான உருவகம். சங்க கால வழக்கே அல்ல: அது பிற்கால வழக்கு. அதற்கு எடுத்துக் காட்டுகள் தேடுவது பயனுள்ள வேலையாகாது. பிறகு ஐந்தாவதான ஐய வகையினையும் அக்காலத்தில் அதிகமாகக் காண இயலவில்லை. ஏழாவது வகையைச் சில

சமயங்களில் மட்டுமே காண முடிகிறது. அவற்றைப் பிறகு சந்திக்கலாம். பத்தாவதான நயம்பட நீட்டுதல் கூட அரிதாகவே பயின்று வருகிறது. பதினோராவதான கழைக்கூத்தும் மிக அரியதே.

குவளை

எடுத்துக்காட்டு கிடைக்காத வகையைக் குறிப்பிடாமல் விட்டு விடுகிறேன், திரும்பத் திரும்ப இல்லையென்று சொல்ல வேண்டாம் என்பதற்காக.

2. குவளையுண்கண்—அக. 183, ஐங். 72.

4. ……… குவளையும்
அஞ்சி லோதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது —ஐங். 299.

6. கண்ணேர் இதழ தண்ணறுங் குவளை
—அக. 358.

8 மாத்தாள் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக் கண். —அக. 62.

10. பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய கொடிய
—சிலப். கானல் வரி.

நீலம்

1. நீலம் பிணைத்தன்ன கண் —கலி. 96.
6. கண்போல் நீலம் —நற். 173.
7. நீலிதழ் உண்கண் —கலி. 33.
8. புரியவிழ் கறுநீலம் புரையுண்கண்
கலி. 15.
9. முற்றெழில் நீல மலரென உற்ற
இரும்பீர் வடியன்ன உண்கண் —கலி. 64.

மாவடு

2. மாழை நோக்கு —அக. 116.
4. வடுவகிர் வென்றகண் —பரி. 8.
7. இளமாங்காய் போழ்ந்தன்ன கண்
—கலி. 108.
8. இரும்பீர் வடியன்ன உண்கண்
—கலி. 64.

அம்பு

7. ……… வாளி
மாறு கொண்டன்ன உண்கண்
—குறுந். 272.

8. செறுச்செய்த வாளி சீற்றத்
தவையன்ன
நேரிதழ் உண்கண் —பரி. 20.

வேல்

7. வேலுண்கண் —குறள். 1113.
வேலரி நெடுங்கண் —சிலப். வேனில். 72.
10. கள்வாய் நீலம் கையின் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய
—சிலப். கானல் வரி.

இந்த எடுத்துக்காட்டுகளைப் பார்த்த பின் சில செய்திகளை மனதில் வாங்கிக் கொள்வது நல்லது, குறிப்பிட்டுச் சொன்ன பதினோரு வகையிலே எடுத்துக்காட்டே காட்டாதவை 3, 5, 11 ஆகியவைதான். இவற்றை தனியாக எடுத்துப் பார்ப்போம்.

3. உருவகம்: இது மிகமிக அரிய சங்க கால வழக்கு எனலாம். ஓர் அபூர்வ எடுத்துக் காட்டு இது:

மடமதர் உண்கண் கயிருக வைத்துத்
தடமென்தோள் தொட்டுத் தகைத்து
—பரி. 20.

5. ஐயம்: இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் இல்லாமல் இல்லை. பலர் அறிந்த ஒன்று கீழே வருவது:

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து.
—குறள். 1085.

11. கழைக்கூத்து: இதற்கும் ஓர் அரிய எடுத்துக்காட்டு பரிபாடலில் வருகிறது.

………பாய்வாள்
இரும்பீர் வடியொத்து மைவிளங்கும்
கண்ணொளியால்
செம்மைப் புதுப்புனல் சென்றிருள்
ஆயிற்றே
வையைப் பெருக்கு வடிவு —பரி. 7.

மொத்தத்தில் பார்க்கும்போது சங்க காலத்தில் பதினோரு வகையாகவும் உவமை பயன்பட்டுள்ளது. சில உவமைகள் பல வகையிலும் [எ. கா. நெய்தல்] சில உவமைகள் சில வகையில் மட்டும் [எ. கா. மாவடு] பயின்று வந்துள்ளன. எனவே சில உவமைகளை பிந்காலப் புலவர்கள், இதுவரை பயன்படாத வகைகளில் கூற முடியும். ஒரு சில வகைப் பயன்படுத்தலுக்கு நாம் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களை விட்டு குறளுக்கோ சிலம்புக்கோ வர வேண்டும். [எ. கா. ஐயம். நயம்பட நீட்டல்] இவற்றை நினைவில் வைத்துக்கொண்டு சங்க காலத்திற்குப் பின் நிலவும் வழக்கைச் சற்று பார்ப்போம்.

சங்க காலத்திற்குப் பின்

இக்காலப் பகுதியின் வழக்கைச் சில பிரிவுகளில் காண்பது தெளிவைத்தரும். அவற்றை ஒவ்வொன்றுகக் காண்போம்.

1. பின்பற்றல்: சங்ககால உவமைகளை அப்படியே எதுவும் மாற்றுமல் பயன்படுத்துதல் அதிகம் என்றே சொல்லலாம். கால வரிசையில் எடுத்துக்காட்டுகள் கீழே வருகின்றன:

வேற்கண்—திருக்கோ. 43, முத்தொள் 30,
பெருங். வத்தவ. பிரச். 46, நந்தி, 56.
ராமா. எழுச்சி. 16. நள. 108,
திருவிளை. 1. நகர். 52, பிரபு. மாயை. 23.

2. பயிலாத உவமை வகைகள்: இலக்கியத்தில் பயின்று வந்தபடி உவமைகளைப் பயன்படுத்துவது ஒரு புறம் நடக்க, மற்றொரு புறம் எந்தெந்த வகையிலே உவமைபயிலவில்லையோ அவ்வகையிலே அதைப் பயன்படுத்தலும் நடக்கத் தொடங்கியது.

(1) சங்ககாலத்தில் அம்பை விரியுவமை யாக்கவில்லை. ஆனால், 'கணையன்ன கண்' (திருக்கோ.59) உடனே வந்துவிட்டது.

(2) அதேபோல அதற்குத் தொகையும் கிடையாது. ஆனால், 'அயிற்கண்' என்பதற்குத் திருக்கோ-31 ஐப் பார்க்கவும்.

(3) அதனுடைய உருவகப் பிரயோகத்திற்கு கம்பர் உண்டு: நெடுங்கண் அயில்—சூர்ப். 16.

(4) அதே நிந்தையாக 'ஏ வென்ற கண்' என்று குற—114 ல் தென்படுகிறது. இதுபோல் புது வகை ஆட்சிக்கு வேறு சில எடுத்துக் காட்டுகள்: கயலைப் புறங்காணும் கண்-வில்லி. அருச். 31; வடிவேல் மருட்டும் மதர்விழி—பிரபு-15.

(5) ஐயத்தின் விளைவாய் எழுந்த அடுக்கு கீழே: நீள் வேலோ அம்போ கயலோ நெடுங் கண்ணோ—சிந். 1977.

(6) விபரீதப் பிரயோகமாக 'கண் போல் அம்பு' (வில்லி. திரௌ. 84) என வருகிறது. வேறு சில வருமாறு: கண் போலும் சாயல் செங்கயல்—மீனு. 22; மடவார் கண்போல் ஈட்டி—குற. 83, கண்ணெழில் கவர்ந்த கடல்மீன்—காஞ்சி. 123.

3. உருவக வளர்ச்சி: கலிங்கத்துப்பரணி காலந்தொட்டு உருவகம் மிகவேகமாக வளர்ந்து விடுகிறது.

கண்வேல்—பரணி—கடை-7.
கண்வாள்—ராமா—எழுச்சி-10.
தெரிவையர் தங்கள் கயலை—திருப். 100
விழி வலை—மதுரை-1
விழிக்கயல்—மதுரை-66.
விழி வேல்—மதுரை-23.
கண் மலர்—மதுரை-75.
விழிவாள்—குற-63
கண்நீலம்—குற-7.

4. பல்பொருளுவமை வளர்ச்சி: பழகிய உவமைகளுக்கு புதுவேகம் கொடுக்க சிலவற்றை ஒன்று கூட்டுவது ஒரு வழி எனலாம். இதைப் பலர் செய்துள்ளனர்.

அயில்வேல் நெடுங்கண்—பெருங். வயா-77
சேலனைய சில்லரிய கடைசிவந்து கரு
மணியம்
பாலகத்துப் பதித்தன்ன....பொருகயற்கண்
சிந்-169.
'காவி' யோகய லோவெனும்கண்ணிணை—
ராம. சூர்ப். 45.
வேலும் கருவிளையும் மென்மானும் காவியும்
சேலும் வடுவகிரும் செஞ்சரமும்போலுமால்
......பூங்கோதை கண்—தண்டி. பக்கம் 48.
வேற்படையும் வாளுமே கண்ணு-நள. 36.
வரி சேர்ந்திடு சேல்கய லோவெனு
முழை வார்ந்திடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வாள் விழி—திருப். 82.
படைவிழி குவளை—திருவிளை நாடு. 23.
சேலேறுங் கலகவிழிக் கணை-குற.14
வாளைக் கயலை நிகர்த்த வெங்கண்-கச்சி.10

5. நயம்பட நீட்டல் வளர்ச்சி: முன் கூறியவற்றைப் போலவே இதுவும் வளர்ந்தது என்றே கூறவேண்டும். உவமைக்குத் தாக்கு சக்தியை அதிகரிக்கச் செய்யும் வழிகளில் இதுவும் ஒன்று எனலாம்.

நீல வலையில் கயல் போல் பிறழுமே
சாலேக வாயில்தொறும் கண்—
முத்தொள். 87.
மறையொன்று ரைப்பன போல் மலர்ந்து
நீண்டு செவிவாய்வைத்
துறைகின்ற ஒடரிக்கண்—சிந். 2606.
பூவிரி மதுகரம் நுகரவும்
பொருகயல் இருகரை புரளவும்
காவிரி எனவரும் மடநலீர்—பரணி-39.
சேனுற நீண்டு மீண்டு
செவ்வரி சிதறி வெவ்வேறு
ஏனுற மிளிர்ந்து நாஞ
விதம்புரண் டிருண்ட வாட்கண்—
ராம. சூர்ப். 25.
கழிய கூரிய என்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையும் நோக்கி
ஞன்—ராம. எழுச்சி 9.
கருப்புவில் மருப்பகழி தொடுத்துமதன்
விடுத்தணைய
கடைக் கண்—திருப். 55
வேலெனப் பிறழ்ந்து கூற்றை வெல்குவன்
வருக என்று
ஓலை விட் டுலவுங் கண்—நைட. 690
வேன லம்பதி கொலைவிட மூட்டிய
வெவ்வேல்—பிரபு பூசை. 9

6. இலக்கியக் கழைக் கூத்து: இவ்வழிதான் பலரும் பின்பற்றும் வழியாகத் தெரிகின்றது. கற்பனைச் சாறு நிறைய பெய்து இனிப்பாக்கிக் குழப்பித்தரும் வழி இது.

பொருங்கண் வேலிளைஞர் மார்பின் ஊடுருவு
புண்கள் தீரவிடு கொங்கையின்
கருங்கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு
கட்டு மாதர்கடை திறமினோ-பரணி—36.
... வேலெக்கும் விழியென் ருலும்
நெல்லொக்கும் புல்லென் ருலும் நேருரைத்
தாக வற்றோ—ராம. சூர்ப். 42.
வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்.
நள. 27.
... ... குவளை நீலம்
கட்பகை யாகு மென்றும்...களைதல் செய்
வார்—திருவிளை-மதுரை-நாடு 22.
...கொலைத்தொழில் மறலியைப் பயிற்றி
அமிழ்தினில் விளர்த்துள் நஞ்சினில் கருகி
ஐயரி சிதறிமை தோய்ந்து
கமல மென் மலரை வனம்புகுத் தியவேற்
கண்ணிணை மான்மருள் நோக்கம்
தமதெனக் கவர்ந்துகொண்டவோமடமான
தடங்கணின் செயல்கவர்ந் தனவோ—
நைட. 158
வேன லம்பதி கொலைவிட மூட்டிய வெவ்
வேல்

மான அஞ்சனம்எழுதிய விழிபொர வரலால்
தான தன்பகை தனைத்துணை கொண்டுறுந் தகைபோல்
பான லஞ்செவி மிசையணிந் தனளொரு
பாவை—பிரபு மாயை பூசை. 9.

தவமறைக் கிழவன் மாயன்
தாணுவென் றிவரும் இவ்வூர்க்
கவர்மனப் பரத்தை மாதர்
கண் வலைப் பட்டே யின்றும்
இவறிய அலரோன் மாலோன்
பித்தனென் றிப்பேர் பெற்றார்.
—காஞ்சி. நகர். 55.

கண்க ளிரண்டும் அம்புக் கணைபோல் நீண்டிருக்கும்
கையத் தணை அகலம் காணுமடா
பெண்கள் மயக்குமவள்விரகப்பார்வைசிங்கி
பிடித்தால் மதப்பயலும் பெலப்பானோ—
குற. 116

எனவே சங்க காலத்திற்குப் பின் வந்த காலம் ஒரு வகையிலே முன்னதின் தொடர்ச்சி தான். பின் பற்றலும் நீட்டலும் பெருக்கலுமாய், இலக்கியத்தில் கழைக் கூத்தாய் பல சமயங்கள் முடிந்தாலும் சில சமயங்களில் சில நூற்றாண்டுக்கொருமுறை புதிய உவமைகள் தோன்றியுள்ளன. இதை மனதில் இறுத்திக் கொண்டு அடுத்த பகுதியில் தொடங்கும் வல்லிக் கண்ணனின் உன் கண்கள் என்னும் கவிதையைப் படியுங்கள்.

நான்கு: தற்காலம்

வல்லிக்கண்ணன் : 'உன் கண்கள்'

சூழ்நிலைப் பாலையில்
வாழ்க்கை வெயிலில்
சுற்றித் திரியும்
என் கண் களுக்கு
குளுகுளு ஓயாஸிஸ்
ஆயின, அன்பே!
உன் னிரு விழிகள்.

அலுவல் அலைகளில்
எற்றுண்டு இடறி
காகிதக் கடலில்
புரண்டு தவிக்கும்
என் விழிகள்
தங்கி இன்புற
பசுமைத் தீவாய்
உதவும், பெண்ணே!
உன்ஒளிக் கண்கள்.

1

கண் வர்ணனை பலர் வாயிலாக இலக்கியத்தில் நிகழ்கின்றது. கதை சொல்லும் இலக்கிய மானுல் சில பல இடங்களில் பெண்ணைப் பேச வந்த கவிஞன் அவளது கண்ணை வர்ணித்துச் செல்லலாம. 'துணைக் கண்ணெனும் பெருங் கடல் கலுழிக் கான்றிட' இருந்தாள் என்று கவிஞன் சொல்லும்போது அது கவிஞன் கூற்றாகின்றது. அப்படி கவிஞன் கூற்ருக இல்லா விட்டால் சில வகையில் ஒரு கூற்ருகத் தான் இருக்க வேண்டும். அவற்றில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்.

1. தாய் கூற்று : தாய் சொல்வதாக அமையும் இது. இதற்கு எடுத்துக் காட்டாக மகளைப் போக்கிய தாய் கலங்கிக் கூறுவதாக அமைந்ததைத் தருகின்றேன்.

பேரமர் மழைக்கண் நீரிய கலுழ
வெய்ய உயிர்க்கும் சாயல்...
மையீ ரோதிப் பெருமடத் தகையே-நற்.27.

2. செவிலி கூற்று : மேற்கண்ட நிலையில் எழுந்த எடுத்துக் காட்டே :

அமர்க் கண் அஞ்ஞையை அலைத்த
கையே—அக. 145

3. தோழி கூற்று : இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவியிடம் தோழி காண, தலைவி அதை மறைக்கத் தோழி சொல்வதாக அமைந்தது கீழ்வருவது :

ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்கண்
நல்ல பெருந்தோ ளோயே!—நற். 13

4. பாங்கன் கூற்று: அவன் கூறுகின்ற சமயங்களில் ஒன்று தலைவியை வியக்கும்நேரம். அப்போது

நிறைமதி வாண்மு கத்துநேர்
கயற்கண் செய்த
உறை மலி உய்யாநோ யூர்சுணங்கின்
மென்முலையே தீர்க்கும்போலும்
—சிலப். கானல் 8.

என்று சொல்கிருன்.

5. பரத்தை கூற்று : ஒரு சமயம், தலைமகளின் பாங்கியர் கேட்கும்படி பரத்தை கூறுவதின் பகுதி இது :

அரிவேய் உண் கண் அவன் பெண்டிர் காணத்
தாரும் தானையும் பற்றி, ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்
தோள்கந் தாகக் கூந்தலில் பிணித்து—
அக. 276

6. தலைவி கூற்று : பின்வரும் பகுதி பரத்தையைப் பிரிந்த தலைமகனிடம் தலைவி சொல்லும் பரத்தையின் வர்ணனை :

செறிதொடி தெளிர்ப்ப வீசி, மறுகிற்
பூப்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்
சென்றனள், வாழிய மடந்தை!—நற். 20

7. தலைவன் கூற்று: முன் சொன்ன அறுவரைப்போலவே தலைவனுக்கும் பலசமயங்களில் பேச வாய்ப்புண்டு. கீழ் வருவது இரவுக்குறிபட்ட ஆற்றுத தலைவன் தோழி கேட்கும்படி தன் நெஞ்சுக்குச் சொல்லும் பாட்டிலிருந்து எடுத்தது :

குவளை யன்ன ஏந்தெழில் மழைக்கண்
திதலை அல்குற் பெருந்தோட் குறுமகட்
கெய்தச் சென்று செப்புநர்ப் பெறினே—
நற் 6.

இவ் வகையிலே வல்லிக்கண்ணனின் கவிதை ஏழாவதான தலைவன் கூற்றாக அமைகின்றது. ஏன் இது கவிஞன் கூற்றாகாது என்றால் இக்கவிதை ஒரு கதை சொல்ல வந்து இடையிலே கவிஞனே படர்க்கையில் வர்ணிக்கும் படியாகவும் இல்லை, அல்லது இக்கவிதையிலே கவிஞன் தான் இதை தன்மைக் கூற்றாக சொல்கிறான் என்பதற்கு வேண்டிய அகச்சான்று ஒன்று கூட இல்லை.

எனவே கூற்று நிலையிலிருந்து பார்க்கும் போது இக் கவிதை மரபை ஒட்டியே அமைந்துள்ளது என்றும் புதுமை ஒன்றுமில்லை என்றும் தெரிகின்றது. [கூற்று முறையிலே புதுமை செய்ய முடியுமா என்ற கேள்வி என் நோக்கத்திற்குத் தேவையற்றது.]

2

கண்வர்ணனை பலர் வாயிலாக நிகழ்வதை பார்த்த பிறகு, இப்பகுதியில், நம்பியகப்பொருளின் அடிப்படையில், தலைவன் கூற்றில் கண் வர்ணனை எதற்காக எப்போது வருகின்றது என்று பார்ப்போம்.

களவு, வரைவு, கற்பு என்னும் மூன்றியல்களிலும் கண்வர்ணனை வரலாம். என்றாலும் நம்பியில் வருகின்ற இடங்களில் வரைவியலுக்கு ஒன்று (உடன் போக்கு மறுத்தல்), கற்பியலுக்கு ஒன்று (பரத்தையிற் பிரிவு: மனத்துவகை கூறல்) மட்டுமே உள்ளன; மற்ற பல இடங்கள் களவியலுக்கே உரியன. களவியலில், கைக்கிளை (காட்சி, ஐயம், தெளிதல், குறிப்பறிதல்), இயற்கைப் புணர்ச்சி (இரந்து பின்னிலை நிற்றல், முன்னிலை யாக்கல், மெய் தொட்டுப்பயிறல், இடம் பெற்றுத்தழாஅல். இடையூறு கிளத்தல், நீடு நினைந்திரங்கல், மறுவற் குறிப்புணர்தல், புகழ்தல், கிளவிவேட்டல், அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்), வன்புறை (பிரியேன் என்றல்), பிரிவுழி மகிழ்ச்சி (செலவுகண்டு உளத்தொடு சொல்லல்), பிரிவுழிக் கலங்கல் (வாயில் பெற்றுய்தல், பண்பு பாராட்டல், பயந்தோர்ப் பழிச்சல்), இடந்தலைப்பாடு (தெய்வம் தெளிதல், ஆயத்துய்த்தல்), பாங்கற்கூட்டம் (உற்ற துரைத்தல், கழற்றெதிர் மறுத்தல், வேட்கை தாங்கற்கருமை சாற்றல், இயலிடம் கூறல்), பாங்கியிற் கூட்டம் (உட்கோள் சாற்றல், செவ்வியெளிமை செப்பல்), பகற்குறி (தஞ்சம் பெறுது நெஞ்சோடு கிளத்தல்), பகற்குறி இடையீடு (தலைவன் குறிவயின் நீடு சென்றிரங்கல், தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்), இரவுக் குறி (தலைவியைத் தேற்றல்), இரவுக்குறி இடையீடு (புலந்து போதல்) என்னும் பன்னிரண்டு கிளவிகளில் இது பயில்வது தெரியவருகின்றது.

தனது வேட்கையைத் தலைவிக்கு உணர்த்தவும் தலைவியது வேட்கையைத் தூண்டவும், தலைவியைக் கூடவும் கூட்டவும், தோழி அல்லது பாங்கனிடம் உற்றதை உரைக்கவும், புணர்ச்சி நீடும்போது அல்லது அதற்கு இடையீடு நேரும்போது எழுகின்ற கலக்கத்தை உணர்த்தவும், புணர்ந்து பிரியும்போது தன் மகிழ்வை அல்லது வருத்தத்தை வெளியிடவும் களவியலில் கண்வர்ணனை பயன்படுவதோடு, வரைவியலில் உடன்போக்கு மறுக்கவும், கற்பியலில் தன் காதன்மையைக் கூறவும் பயன்படுகிறது. அத்துடன், தலைவன் தலைவியுடனோ தோழியுடனோ அல்லது பாங்கனுடனோ உரையாடும்போதும், தன் நெஞ்சுடனே பேசிக் கொள்ளும்போதும் இது நிகழ்கின்றது. இவற்றை மனதில் வைத்துக் கொண்டு உன் கண்களைப் பார்ப்போம்.

> குளுகுளு ஒயாஸிஸ்
> ஆயின, அன்பே!
> உன்னிரு விழிகள்

என்று வருகின்ற விளியை நோக்கத் தெரிவது இதுதான்: தலைவன் பாங்கனிடமோ அல்லது தோழியிடமோ கூறுவதல்ல, அவன் தன் தலைவியிடம் நேரடியாக உரைப்பதுதான் இது. இதைப் பொறுத்தவரை ஐயத்திற்கிடமில்லை.

ஆனால், இது எந்த இயலைச்சார்ந்தது என வினவும்போது சரியான விடை கிடைப்பதில்லை. உடன் போக்கு மறுக்கவோ, போக்குடன்படவோ, உவந்தலர் சூட்டி உண்மகிழ்தலோ தம்மூர் சார்ந்தமையோ அல்ல இது; எனவே வரைவியல் அல்ல. வாயில் வேண்டலோ, மனத்துவகை கூறலோ அல்ல; எனவே கற்பியல் அல்ல. எஞ்சியுள்ளது களவியலே. அந்த இயலை இது சாருமா? காட்சி, ஐயம், தெளிதல் முதலான கைக்கிளை அல்ல; இரவுக்குறி, பகற்குறி, இடந்தலைப்பாடு, பிரிவுழி நிகழ்ச்சி, வன்புறை என்று கூற அகச்சான்று ஏதுமில்லை.

இருக்கின்ற ஓர் அகச்சான்று, இது தலைவன் தலைவியிடம் கூறுவது என்பதைத்தான் சுட்டுகின்றது. அப்படியானால் ஓரிடத்தில் தலைவனும் தலைவியும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். அப்படி இருக்கக்கூடிய வாய்ப்பு கிடைப்பது இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், மற்றும் பாங்கியிற் கூட்டத்தில்தான் இம்மூன்று வாய்ப்பில் இது எதைச் சார்ந்தது என்றும் முடிவுகட்ட இயலவில்லை.

எனவே, இது கற்பையோ வரைவையோ சார்ந்ததல்ல என்று கூறமுடிந்தாலும், களவைச் சார்ந்தது என்று ஒரு தலையாக அகச் சான்று காட்டித் தீர்மானிக்க முடியவில்லை.

இவ்விடத்தில் இன்னொரு செய்தியினையும் கவனிக்க வேண்டும். நின்று நின்று மெல்ல நடக்கும் கவிதை நடையை உணரும்போது, தலைவியின் முன்னால் நின்று புகழ்தலுக்கு வேண்டிய வேகம் இதிலில்லை என்றே தோன்றுகிறது அப்படியானால். தலைவன் தனித்திருந்து தன் மனக்கண்முன் தலைவியை முன்னிலைப் படுத்தி ஒரு வித மயக்க நிலையிலே கூறுவதாகத்தான் இக்கவிதை இருக்க வேண்டும். இம்முறை புதிதல்ல; என்றாலும் இங்கும் கிளவியை நிச்சயப்படுத்த முடிவதில்லை.

ஒன்றை நிச்சயப்படுத்தலாம் : இது கண் நலம் பாராட்டல்தான். மேற்கூறிய இரண்டு வகையிலும் கிளவியைக் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்ட முடியாமைக்குக் காரணம் அந்த மரபில் எழுந்ததல்ல இது என்பதுதான்.

எதுவும் ஒன்று 'தூண்டலாக அல்லது தூண்டலின் விளைவாக அமைகின்றது தூண்டல் பயனை நோக்கிச்செல்வது; விளைவு தூண்டலைச் சுட்டுவது. இக்கவிதையில் வருகின்ற பாராட்டல் தூண்டலா அல்லது விளைவா ?

இது தூண்டல்தான் என்ருல் இதன் பயன் என்ன என்பது தெளிவாக வில்லை. இது தலைவனின் வேட்கையைத் தலைவிக்கு உணர்த்துகின்றதா, அவளது வேட்கையைத் தூண்டுகின்றதா, அவளைப் புணர்ச்சிக்கு உடன்படச் செய்கின்றதா என்னும் சில விஞக்களுக்கு இக் கவிதையில் குறிப்பான பதில் கிடைப்பதில்லை.

இது விளைவாக இருக்கலாம் என்ருல் இதை தூண்டியது எது என்பது சரியாக விளங்கவில்லை. கலவி மயக்கமா, புணர்ச்சிக்குப் பின்னுள்ள சுகமா என்னும் கேள்விகளுக்கும் பதில் இல்லை.

இவ்விரண்டையும் தெரிந்து கொள்ளாத வரை கிளவியைத் தீர்மானித்தல் அரிது. கிளவியைத் தீர்மானிக்கும் வரை இது களவியல்தான் என்று அறுதியிடுதலும் அரிது.

எனவே, இயற்பாகுபாட்டை இக்கவிதைக்கு நடத்துவது எளிதல்ல என்றுணரும் அறிவைத் தொடர்ந்து இப்பாகுபாடு இதற்கு அவசியந்தாஞ என்ற ஐயம் எழுகின்றது. [இந்த ஐயம் சரியானதே என்பதைப் பின்வரும் பிரிவுகள் தெளிவாக்கும்.]

முடிவாகக் கூறமுடிவது இதுதான் : தலைவியின் கண் நலம் பாராட்டல் என்ற நிலையிலே இது பழையதே என்ருலும் மற்ற நிலைகளிலே இது பழையதல்ல.

3

கயற்கண், மான்விழி என்று வெறும் வர்ணனையாக மட்டும் கண் பேசப்படுவதில்லை. அதற்கு இரண்டு தொழிலை கற்பித்துக் கூறுகின்ருர்கள் தமிழ்க் கவிஞர்கள்.

இருநோக கிவளுண்க ணுள்ள
தொருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து.

என்னும் 1091ஆம் குறள் இதைத் தெளிவாக்குகின்றது. இதையே

.........நஞ்சும் அமிர்தமுமே
போல்குணத்த பொருகயற்கண்—சிந்.167.

என்கிருர் திருத்தக்க தேவர். இப்படிப் பொதுவாகக் கூறினுலும் ஒரு குறிப்பிட்ட நேரத்திலே இரண்டில் ஒன்ருகத்தான் இருக்க வேண்டும்.

புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண் வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய—கானல்வரி

என்பதுபோல் நோய் செய்தல் வேண்டும் அல்லது,

.........பேதைதன் பார்வை
எண்ணிற் சிறந்த இருந்துயர் நோய்தனக்கு
இன்மருந்து—தஞ்சை. 4

என்பதுபோல் மருந்தாக வேண்டும். எனவே கண்கள் செய்கின்ற நோய் காமவேட்கை; தருகின்ற மருந்து இணை விழைச்சிற்குச் சம்மதம்.

உன் கண்களில் வருகின்ற தலைவியின் விழிகளது நோக்கு மருந்து நோக்கென்றே கூற வேண்டும், ஏனென்ருல்,

தங்கி இன்புற
பசுமைத் தீவாய்
'உதவும், பெண்ணே.'
உன்ஒளிக் கண்கள்

என்று தலைவன் அவற்றின் இயல்பைக் கூறுகின்ருன்.

இவை தருகின்ற மருந்து எந்த நோய்க்கு ? மரபு வழியான காம வேட்கைக்கா என்று வினவும்போது சற்றும் எதிர்பாராத பதிலே கிடைக்கின்றது.

சூழ்நிலைப் பாலையில்
வாழ்க்கைப் வெயிலில்
சுற்றி.....................
அலுவல் அலைகளில்
எற்றுண்டு இடறி
காகிதக் கடலில்
புரண்டு.....................

திரிந்ததாலும் தவித்ததாலும் எழுந்த அச் சார்பற்ற காமத்தைச் சாராத நோய்தான் தலைவனுடைய நோய். இது அவனது தலைவியின் கண் பார்வை ஏற்படுத்தியது அல்ல; மாருக சுழலும் வாழ்வும் வேலையும் விளைத்தது அது. எனவே அவனது நோயைச் செய்த எந்தப் பெண்ணின் கண்களுமல்ல; அதனுல் அவனது நோய் வழக்கமான காம வேட்கை அல்ல.

அவள் செய்யாத வேட்கை நோய்க்கு அவளெப்படி புணர்ச்சிக்குச் சரி என்னும் மருந்து நோக்கைத் தர முடியும்? அவளது நோக்கு மரபை ஒட்டிய மருந்தல்ல; அவளது விழிகள் அவனுக்குத் துணை செய்கின்றன. எதற்கு என்ருல் காமம் சாராத ஒரு தவிப்புக்கு. அவனுடைய தவிப்பே காமம் சார்ந்ததில்லை என்ருகும் போது, அவளுடைய கண்கள் தரும் உதவி காமம் சார்ந்தது என்று சொல்வது அரிதாகவும் வலிந்து பொருள் கொள்வதாகவும் உள்ளது.

இவ்வாறு வருகின்ற நோயும் அதன் மருந்தும் இலக்கிய வழக்கில் இன்ஞெரு புதுமை என்றுதான் சொல்ல வேண்டும்.

4

தமிழிலக்கியத்தில் தலைவன் கூற்ருக வரும் கண் வர்ணனை,

செருவிள நீர்பட வெம்முலைச்
செவ்விள நீர்படு சேயரிக்
கருவிளை நீர்பட ஊடுவீர்—பரணி-32.

எனவந்து தலைவியின் நிலையைக் காட்டும். அல்லது

உடலின் உயிரையும் உணர்வையும்
நடுவுபோய்
உருவு மதர்விழி உடையவர் திறமினே—
பரணி-28.

என்பதுபோல் வந்து தலைவனின் நிலையைக் காட்டும். இங்குகூட இவ்விருவரின் நிலையும் புணர்ச்சியுடன் இழைந்த ஒன்றே, அதைவிட்டு விலகியதல்ல.

ஆனல் உன் கண்களில் வருகின்ற தலைவனின் நிலை நேரடியாகக் காமத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று முன்பு பார்த்தோம். இது அவனுடைய பால் வாழ்க்கையையோ அல்லது காதல் வாழ்க்கையையோ நமக்குக் காட்டவில்லை என்பது ஒருமுறை படித்த உடனே தெரிந்து விடுகிறது.

அப்படியென்ருல் இக்கவிதை இதிலுள்ள தலைவனுடைய அந்த நிலையைத்தான் காட்டுகிறது என்ற கேள்வி எழுகின்றது. ஏனென்ருல் இது நிச்சயம் அவனுடைய ஏதாவது ஒரு நிலையைக் காட்டித்தான் ஆகவேண்டும். அவன் வாழும் சமூகத்தில் அவனது நிலையைக் காட்டுகின்றது; அவனது வேலையான எழுத்தர் தொழிலையும் அத்தொழிலுக்கே உரிய காகிதக் கடலையும். அக்காகிதங்கள் வாயிலாகக் கிளம்பும் பலவேறு அலுவல் அலைகளையும் காட்டுகின்றது. அதோடு அவனது பற்ருக்குறை பரவித் துன்புறுத்தும் வாழ்வையும் காட்டுகின்றது. அலுவலகத்தில் நீரால் தொல்லை; வெளியே வெயிலால் தொல்லை. இது இன்றைய நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தோரின் வாழ்க்கை நிலை. இந்த சமூக நிலையிலே இருக்கின்ற இத் தனிமனிதனுை இத் தலைவனின் நிலையும் மிகத் தெளிவாகின்றது இந்தக் கவிதையிலே. இந்த இயல்பு தமிழிலக்கிய வழக்கத்தில் நாம் காண முடியாதது; புதியது.

5

இலக்கியத்தில் பயின்று வந்துள்ள கண்ணுவமைகளைப் பற்றி சில கருத்துக்களை இங்கே சொல்வது நல்லது. இவற்றை முதற் பகுதியில் சொல்லிய செய்திகளிலிருந்து உய்த்துணர இயலும்.

1. வழக்கிலுள்ள உவமைகளில் பல சங்க காலத்திலேயே தோன்றியவை. [குவளை, நெய்தல், அம்பு, வேல், மான், கயல், கூற்றம் முதலியன.

2. சில ஒவ்வொரு நூற்ருண்டிலும் நிறையப் பயின்றவை. [குவளை, மான், கயல், அம்பு, வேல்]

3. ஒன்றிரண்டு சில நூற்ருண்டுகளுக்கு ஒரு முறையே தலைகாட்டுகின்றன. [நெடுங் கண் வலையால் உயிர் கொல்வைமன் நீயும் என சிலம்பிலும் நெடுங்கண் சுருக்கு வலை, என மேகலையிலும் சங்க காலத்தில் தொடங்கும் வலை, 15ஆம் நூற்ருண்டுத் திருப்புகழில் மானர் வலைக்கண் என்றும் 17ஆம் நூற்ருண்டு மதுரைக் கலம்பகத்தில் விழிவலை என்றும் அடுத்த நூற்ருண்டுக் காஞ்சிப் புராணத்தில் மாதர் கண்வலை என்று விட்டுவிட்டுத் தோன்றியுள்ளது.]

4. ஒருமுறை புகழொடு தோன்றி நின்று விடுகின்றன வேறு சில. [பித்திகம், பறை, நச்சு.]

5. ஒரு சில நூற்ருண்டுக்கு இருமுறையே ஓரிரு உவமைகள் கூடுகின்றன. சங்க காலத்தவைகளுடன் 5 அல்லது 6ஆம் நூற்ருண்டில் தான் படையும் வாளும் சேர்கின்றன; பிறகு 10ஆம் நூற்ருண்டில் கழுநீர், பன்னிரண்டில் வண்டு, பதினைந்தில் அல்லியும் நச்சும் பத்தொன்பதில் வாளை பிறந்து கூடுகின்றன. இக் காலத்தில் மயில் (கல்கியின் 'மயில்விழி மான்'), சிட்டு (சிட்டுக்கண்; திரைப்பாடல்) பொறி (விழிப் பொறியால் தீமூட்டு: சி. மணி) எனப் பலவகை உவமைகள் பயன்படுகின்றன. எனவே இந்த நூற்ருண்டு வழக்கத்திற்கும் அதிகமான கண்ணுவமைகளைத் தந்துள்ளது என்றே கூறவேண்டும்.

உன் கண்களிலே எதிர்ப்படும் ஓயாஸிஸும் தீவும் மேற்குறிப்பிட்ட வகையில் ஐந்தாவதைச் சார்ந்தது புழுக்கத்தில் தேய்ந்து உருவிழந்த பழங்காசு உவமைகளை நீக்கிவிட்டு பளபளக்கும் புதியவைகளைச் சேர்ப்பது நாள்தோறும் நடப்பதல்ல என்ருலும், இந்நூற்ருண்டின் சிறப்பு என்று உணரும்போது, உன்கண்ணிலுள்ள இரு உவமைகளின் புதுமையை மட்டும் எண்ணிப் புகழ்ந்துவிட முடியாது. அவை எவ்வளவு தூரம் பொருட் செறிவு பெற்று, கவிதையில் இணைந்து வருகின்றன என்பதையும் எண்ணித்தான் அவற்றை மதிப்பிட வேண்டும்.

ஓயாஸிஸ் கண் என்ருே தீவுக்கண் என்ருே தனித்து தொகை உவமைகளாக இங்கே அவை வரவில்லை. அப்படி வந்திருந்தால் அவற்றின் விளைவு நகைச்சுவையாக மாறியிருந்தாலும் வியப்பில்லை. அப்படியின்றி, வேறு விதமாக வருகின்றன.

அநுபவக் கூறுகள் போடுகின்ற வட்டத்திற்குள்ளே மலர்பவை அவை. வாழ்வை வெயிலாக்கி, சூழலைப் பாலையாக்கியதும் தர்க்க ரீதியாக வந்து விழும் கற்பனை ஓயாஸிஸ். காகிதத்தைக் கடலாக்கி, அலுவலை அலையாக்கிய பிறகு அடுத்த படியாக அமைவது தீவு தான். எனவே இவ்விரண்டு கற்பனைகளும் தமக்குரிய வட்டங்களுக்குள் மலர்வதால் செறிவென்னும் இயல்பைப் பெற்று சிறப்படைகின்றன.

6

உவமைகள் பண்பு அல்லது தொழில் அல்லது பயன் என்னும் அடிப்படையில் எழும் என்பது பொதுவான கருத்து. இதுவரை பயின்று வந்த கண்ணுவமைகளில் சில பண்பின் அடிப்படையில் பிறந்தவை; நிறத்திற்குக் குவளை, இயல்புக்கு மான், அளவுக்கு வேல் வடிவுக்கு மாவடு. வேறுசில தொழிலுவமைகள்: கொல்வதற்குக் கூற்றம், வளைத்துப் பிடிப்பதற்கு வலை. மூன்றாம் வகையான பயனுக்கு எடுத்துக்காட்டு தென்படவில்லை.

இவற்றில் எவ்வகையைச் சேர்ந்தவை தீவும் ஒயாஸிஸும் என்று பார்ப்போம். இவை பண்புவமைகளா? இரண்டும் நிறம் பசுமை என்று பொதுவாகக் கூறலாம். பசுமை கண்ணுக்கு ஒவ்வாது. அவற்றுக்கு குறிப்பிட்ட இயல்பும் கிடையாது; வேண்டுமானால் ஒயாஸிஸுக்குக் குளுமையையும் தீவுக்கு பசுமையையும் கூறலாம். என்றாலும் இவ்வியல்பின் அடிப்படையில் இவ்வுவமைகள் பிறந்ததாகத் தெரியவில்லை. (இதைப் பின்னால் விரிவாகக் காணலாம்.) அவற்றுக்கு குறிப்பிட்ட வடிவு கிடையாது; அவற்றின் அளவோ பெரிது. எனவே இவ்விரண்டு ஒப்புமையின் அடிப்படையில் இந்த உவமைகள் பிறக்கவில்லை.

இவை தொழிலுவமைகளா என்று கேட்டால், சோலைக்கும் தீவுக்கும் தொழில் கிடையாது. வலைக்குத் தொழில் பிடித்தல் என்பதைப் போலத் தீவுக்குத் தொழில் இது என்று குறிப்பிடமுடியாது. எனவே இவை தொழிலுவமைகள் அல்ல.

அப்படியானால் இவை பயனுவமைகளா என்று வினவினால் ஆமாம் என்றுதான் சொல்ல வேண்டும். பாலைவனத்தில் சுற்றித்திரிந்தவனுக்குச் சோலையின் பயன், கடலில் அலைகளில் இடறித் தவிப்பவனுக்குத் தீவின் பயன் எதுவோ அதுதான் தலைவியின் கண்கள் நல்கும் துணை. சோலையும் தீவும் தொல்லைப்படுவோனுக்கு துன்பத்தை நீக்கி, இன்பத்தைத் தந்து வாழ்வில் திரும்பவும் ஈடுபாட்டைக் கொடுக்கின்றன; அவ்வாறே தலைவனுக்கு தலைவியின் கண்களும் கொடுக்கின்றன. ஆகையால்தான் இவற்றைப் பயனுவமைகள் என்பது பொருத்தமாகும்.

வழக்கம் போல வடிவு, நிறம் கருதிய பண்புவமைகளாகவோ இவை பயின்று வராமல் பண்புவமைகளாக வருவது புதுமை சான்றதாகும்.

7

இத்தனை காலம் இலக்கியத்தில் வழங்கி வந்துள்ள புகழ் பெற்ற கண்ணுவமைகளான சில மலர்கள், சில கருவிகள், மான், மீன், வலை போன்றவைகளை நினைவு கூர்ந்து, சோலையினையும் தீவையும் பார்க்கும் போது அளவு என்னும் நோக்கு தானே உண்டாகின்றது. அந்த நோக்கு இவ்விரண்டுக்கும், பெரியவை என்னும் இயல்பை சிறப்பித்துக் காட்டுகிறது. அப்போது அளவிற் பெரிய சோலையையும் பரந்து கிடக்கும் தீவையும் [பயனையே அடிப்படையாகக் கொண்ட போதிலும்] கண்ணுக்கு ஒப்பிட்டது புதுமை போலத் தோன்றும். என்றாலும் பெரியதைக் கண்ணுக்கு ஒப்பிடுவது புதியதல்ல. இது மரபுவழியானதே என்பதற்கு சில அரிய எடுத்துக்காட்டுகள் உள்ளன.

துண் எனும் நெஞ்சினள், துளங்கினாள், துணைக்
கண் எனும் நெடுங்கடல் கலுழி கான்றிட
மண் எனும் செவிலிமேல் வைத்த கையினாள்,
பண் எனும் கிளவியால் பன்னி ஏங்கினாள்.

—ராம—11-14-46

என்று வருகின்ற கம்பரின் பாடலையும்,

......................துஞ்சாது
எறிதிரைக் கருங்கடல் ஏய்க்கும்
அறலியல் கூந்தற்கு ஆடமர்க் கண்ணே.

—மதுரை. 4—4.

என்னும் குமரகுருபரரின் வரிகளையும் கண்டால், அளவிற்பரந்த கடலை அளவுவமையாக இல்லாது இயல்புக்காகவும் செயலுக்காகவும் கண்ணுவமையாகப் பயன்படுத்தியது விளங்கும். இந்த அரிய மரபுவழியில் வந்தவைதான் உன் கண்ணிலுள்ள உவமைகளும் என்பதை அறியும்போது மரபு என்னும் ஆறு எப்படியெல்லாம் ஓடுகின்றது என்பது தெரியவரும்.

மேற்கண்ட இரண்டு எடுத்துக் காட்டுகளில் கடலுவமை இடம் நோக்கி எழுந்து, பாடலுடன் இரண்டறக் கலந்து சிறப்பு பெறுகின்றது; அதேபோல ஒயாஸிஸும் தீவும் இக்கவிதையிலே இணைந்து சிறக்கின்றன.

8

உன் கண்களில் வருகின்ற உவமைகள் இரண்டு: ஒன்று, நீரற்ற பாலையிலுள்ள ஒயாஸிஸ்; மற்றொன்று பரந்த நீர்ப்பரப்பிலுள்ள தீவு. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுகொண்ட இடங்களில் உள்ளவை. இவ்வாறு மாறுபட்ட உவமைகளை இணைத்துக் கவிதை படைப்பது அரிதென்றாலும்புதிதல்ல. காரணம்?

ஈசற்கு யான்வைத்த அன்பின்
அகன்று, அவன் வாங்கிய என
பாசத்தின் காரென்று, அவன் தில்லை
யின் ஒளி போன்று'' அவன் தோள்
பூசத் திருநீறு எனவெளுத்து,
ஆங்கவன் பூங்கழல் யாம்
பேசத் திருவார்த்தை யின்பெரு
நீளம் பெருங்கண்களே

—திருக்கோ. 109

என்னும் மாணிக்க வாசகரின் பாடலிலே அன்பு, கருமை, ஒளி, நீறு, வார்த்தை போன்ற பல வகைப்பட்ட மாறுகொண்ட கருத்துக்கள் கண்ணுக்கு உவமையாகின்றன. இவைகளின் இடையிலுள்ள மாறுபாடுகள் மறைந்து இவை ஒன்றாகக் கலந்து இயங்குவதற்கு முதன்மை

யின் காரணம் கவிதைத் தலைவனின் ஈசன் மயமான நோக்குதான். ஈசனிடம் வைத்த அன்பு, ஈசனது தில்லையின் ஒளி என உவமைகளை விரிக்கும்போது ஈசன் என்னும் பொதுக் காரணி தென்படுகிறது; அதுதான் இக்கவிதைக்கு ஒருமையைத் தருகின்றது.

இந்த ஐந்துவமைகளில் கருமைக்கும் ஒளிக்கும் உள்ள தொடர்பு மாறுபாடு என்பதைவிட முரண்பாடு என்பதே சிறந்தது. எனவே இக்கவிதை பல மாறுபாடுகளாலும் ஒரே ஒரு முரண்பாட்டாலும் நடக்கின்றது எனலாம். இத்தகைய கலப்பு பிழையாகாது இயல்பாகத் தெரிவதற்குரிய காரணம் மேற் கூறிய பொதுக் காரணிதான்.

வல்லிக்கண்ணனின் கவிதையிலும் ஒரே இனத்தைச் சாராத பல மாறுபட்ட உவமைகள் வருகின்றன. பாலை, வெயில், சோலை, கடல், அலை, தீவு என்னும் மாறுபாடுகளைப் போக்கி ஒன்றாகக் கலக்கவைக்கும் ரசாயனம் எது என்றால் பொதுவாகத் தலைவியின் கண்கள் எனலாம். ஆனால் குறிப்பிட்டுச் சொல்வதென்றால் தனித்தனியாக உருவகங்களில் வருகின்ற பொருள்களான சூழ்நிலை, வாழ்க்கை, அலுவல், காகிதம் என்னும் நான்கிற்குமுள்ள நெருங்கிய இயல்பான தொடர்புதான் என்று சொல்ல வேண்டும். அதோடு இன்னொன்றையும் குறிப்பிடலாம்: சிக்கலான ஆனால் இயல்பான தொடர்பு ஒன்று. இதைச் சற்று கவனிப்போம். சூழ்நிலையைப் பாலையாக்கி வாழ்க்கையை வெயிலாக்கியதும் தலைவியின் கண்களை அதே ரீதியில் இயல்பாகவே சோலையாக்கித்தான் தீரவேண்டும்; சோலையில் சென்றுதான் இந்த இயக்கம் முடிய வேண்டும். அதே போல காகிதத்தைக் கடலாக்கி அலுவலை அலையாக்கிய பிறகு கண்களைத் தீவாக்கித்தான் நிற்கவேண்டும்; அதுதான் இயல்பான ஓட்டத்தின் முடிவு. இவ்வாறு சில காரணிகள் இக்கவிதையிலுள்ள மாறுபாடுகளைப் போக்கி இதற்கு ஒருமையை அளிக்கின்றன.

மாணிக்க வாசகரின் பாடலில் கண்டதைப் போல முரண்பாடுகளும் இதில் உண்டு. ஆனால் அவை முன்னதிலுள்ளதைப் போல தற்செயலாகத் தோன்றாமல் கவிதையின் அமைப்புக் கூறாகத் தோன்றுகின்றன. இதை விளக்குவதற்குமுன் வேறொரு செய்தியைச் சொல்லியாக வேண்டும்.

இரண்டு பொருள்களுக்கு இடையிலுள்ள தொடர்பு நேரடியாக அல்லது முரணடியாக அமையலாம். இவற்றுள் முதல்வகைத் தொடர்பைவிட இரண்டாம் வகைத் தொடர்பு அதிக அழுத்தமானது என்றும் சொல்லலாம். உன் கண்கள் கவிதையில் வகைக்கு மூன்றாக இரு வகைத் தொடர்புகளும் பொருந்தியுள்ளன.

[இதன் ஊடும் பாவுமாக இவற்றைக் கொள்ளலாம்.]

இரண்டு பகுதிகள் கொண்ட இக்கவிதையின் முதற் பகுதியில் பாலை, வெயில், ஓயாஸிஸ் என்பனவும் இரண்டாம் பகுதியில் கடல், அலை, தீவும் என்பனவும் படிமங்களாக வருகின்றன. இவற்றுள் முன் சொன்ன இருவகைத் தொடர்பு ஒவ்வொரு பகுதிக்குள்ளும் இரு பகுதிகளுக்கு இடையிலும் நிகழ்கின்றது—அதாவது கவிதையின் பகுதிகளுக்குள்ளும் முழுக்கவிதைக்குள்ளும் நிகழ்கின்றது.

முதற் பகுதியில் வருகின்ற வறண்ட பாலைக்கு முரண் வளமார்ந்த ஓயாஸிஸ்; இவைகளுக்குள்ள தொடர்பு முரணடியானது. இரண்டாவது பகுதியில் வருகின்ற நீர்மயமான கடலுக்கு முரண் நிலமயமான தீவு; இவைகளின் தொடர்பு முரணடியாகப் பிறந்தது. ஆனால் பாலைக்கும் வெயிலுக்கும், பிறகு கடலுக்கும் அலைக்கும் இருக்கின்ற தொடர்பு முரணடியானதல்ல, நேரடியானது. இவ்வாறு ஒவ்வொரு பகுதியிலும் ஒரு நேரடித் தொடர்பும் ஒரு முரணடித் தொடர்பும் உள்ளன.

இதே தொடர்புக் கோலம் முழுக் கவிதையில்—இரு பகுதிகளுக்கிடையில்—தென்படுகின்றது. முதற்பகுதியில் வரும் பாலை நீரற்றது. இரண்டாம் பகுதியில் வரும் கடல் நீர் நிறைந்தது. பாலைக்கும் கடலுக்கும் இடையிலுள்ள தொடர்பு முரணடியானது. முதற்பகுதியிலுள்ள ஓயாஸிஸுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ள தீவுக்கும் இருக்கின்ற தொடர்பு முரணடியானதல்ல, நேரடியானது; இரண்டும் (ஒன்று சிறியது மற்றது பெரியதென்றாலும்) நிலந்தான், பல பசிய மரங்களை உடையவைதான்.

இவ்வாறு வகைக்கு மூன்று என்னும் பொது அமைதியோடு, பகுதிக்குள்ளும் பகுதிகளுக்கு இடையேயும் வகைக்கு ஒன்று என்னும் சிறப்பு அமைதியினையும் அரிய முறையில் காண்கிறோம். அதனால்தான் இக் கவிதையில் இறுக்கமும் பிசிறு தட்டாமையும் உருவத் தெளிவும் புலனாகின்றன.

புள்ளி தவறாது போட்ட இந்தச் சீரான கோலத்தை விளக்கும்போது இன்னொரு செய்தியையும் சொல்லிவிடுவது நல்லது. முதற் பகுதியில் வெயிலுக்கும் ஓயாஸிஸுக்கும், இரண்டாம் பகுதியில் அலைக்கும் தீவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அதேபோல பகுதிகளுக்கிடையில் வெயிலுக்கும் அலைக்கும் தொடர்பில்லை என்பதை நோக்கும்போது இதன் உருவச் சிறப்பு அதிகரிக்கின்றது.

மேலே குறிப்பிட்டதைப் போல இருவகைத் தொடர்புகளைக் கணக்கிட்டுச் சீராக்கி கவிதையே மிக இறுக்கமாக நெய்து தருவது பழைய கவிதைகளில் காண இயலாத உத்தி என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ஒழுங்கு நெறியினால்தான் இக்கவிதைக்கு இவ்வளவு ஆற்றல் கிடைக்கின்றது; இதனால்தான் இப்பிரிவில் எடுத்துக் காட்டிய மாணிக்க வாசகரின் பாடலினும் இது சிறந்ததாக அமைகின்றது.

9

இக் கவிதை நடக்கின்ற நடையிலே, இணைவிழைச்சுக்காகக், கண்ணை நயந்துறைக்கும் மயக்கமுற்ற உணர்ச்சி நிலை தெரியவில்லை. மாறாக இதன் தலைவன் அறிவு சார்ந்த நிலையில் நின்ற அவளது கண்களை வர்ணிக்கிறான். அக் கண்களின் வருணனையில் அவன் தன்னை இழப்பது கிடையாது; மாறாக தன் வாழ்வை, தன் சூழலை, தன் வேலையை நன்றாக உணர்ந்த நிலையில், அவற்றின் தொல்லையைப் பொறுக்காது வருகின்ற தவிப்பை உணர்ந்து, இத் தவிப்பை உண்டாக்கியவற்றை இயற்கையான உவமைகளால் விலக்கி, அவ்வுவமைகள் ஒட்டிச் செல்லும் வழியிலே கண்களுக்கு ஓயாஸிஸ் என்றும் பசுமைத் தீவு என்றும் படிமம் கொடுக்கிறான். தலைவனது கூற்றிலே இப்படிப்பட்ட அறிவு சார்ந்த நிலை இலக்கியத்திலே பயிலாத ஒன்று என்றுதான் கூற வேண்டும்.

இவ்வாறான அறிவு சார்ந்த நிலையைவிடப் புதிய இந்த நூற்றாண்டு நோக்கு இக் கவிதையில் அருமையாகத் தென்படுகின்றது. இந்த ஒன்றைக் கொண்டே இது இந்த நூற்றாண்டைய படைப்பு என்று தெளிவாக அறிய முடியும். இது ஒன்றே இதனுடைய புதுமைப் பெருமைக்குப் போதுமென்று கூறும்படியானது என்ன என்று இனி பார்ப்போம்.

தலைவன் கூற்றாய் வருகின்ற கண்வர்ணனை தலைவியை அகத்துறை வாழ்விற்கு இன்றியமையாத ஓர் அங்கமாகக் காட்டும்; அவளுக்குத் தலைவி என்ற இடத்தை மட்டும் சுட்டி நிறுத்தும். காதல் வாழ்வின் பகுதி என்ற பெருமையைத் தவிர அவளுக்கு வேறு பெருமை கிடையாது. தலைவனும் தலைவியும் இணைந்து நடத்தும் வாழ்வு வெறும் அக வாழ்வு என்பதையே இதுவரை காண்கிறோம்; அக வாழ்வைத் தவிர புறவாழ்வு என்னும் இன்னொரு வாழ்வு உண்டு, அதிலும் தலைவிக்குப் பங்குண்டு என்பதை மரபுக் கவிதைகளில் நேரடியாகக் காண முடியவில்லை.

ஆனால் உன் கண்களில் வருகின்ற கண் வர்ணனை அகவாழ்வைச் சார்வதைவிட புற வாழ்வையே அதிகம் சார்கின்றது இணை விழைச்சை நோக்கிச் செல்லாமலும் கலவி மயக்கத்தில் அல்லது கலவிக்குப்பின் எழுகின்ற புகழ்ச்சியாக இல்லாமல், வாழ்வின் இரண்டு கூறான அலுவல் வாழ்வு, அலுவலகம் நீங்கிய (அகவாழ்வை அடக்கிய) சொந்த வாழ்வு என்பவைகளை முன் நிறுத்தி, அந்த இரண்டு வகையான வாழ்விலும்—சாதாரண, புறமான வாழ்விலும் தலைவியானவள் துணைபுரிகின்றாள் என்று சொல்லும் இக் கவிதை முன்னிலைப் பெண்ணுக்கு மறைமுகமாக அகவாழ்வில் தலைவியின் இடத்தைச் சுட்டினாலும், நேரடியாக வாழ்க்கைத் துணைவி என்னும் இன்றைய தத்துவத்தை உணர்த்துகிறது; பெண்ணை மஞ்சத்திலிருந்து அழைத்து வந்து இவ்வுலகத்தையே அவள் முன் படைக்கிறது; தலைவனின் எல்லா வகையான வாழ்விலும் அவள் பங்கு பெறுபவள் அவனுக்குத் துணைவியாக நிற்பவள் என்பதை தெளிவாக்குகின்றது.

இவ்வாறு தலைவியைத் துணைவியாகக் காணும் நோக்கையுடைய இக்கவிதை புதுமை சான்றது என்பதில் ஐயமில்லை.

10

உன் கண்களின் யாப்பைப் பற்றிச் சொல்ல அதிகம் ஒன்றுமில்லை.

ஏழுவரி கொண்ட முதற்பகுதியாலும் ஒன்பது வரிகொண்ட இரண்டாம் பகுதியாலும் ஆனது இது. ஒவ்வொரு வரியிலும் இரண்டு சீர்கள் உள்ளன; எனவே இது குறளடியால் ஆனது என்று சொல்லலாம். குறளடி வஞ்சிக்கும் அதன் இனத்திற்கும் உரியது. இது நான்கு நான்கு வரிகளாய் நடக்காததால் வஞ்சித் துறையல்ல; இதில் தனிச் சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் இல்லையாதலால் கலிப்பாவும் அல்ல. கனிமுன் நிறைவரும் வஞ்சித்தளையும் இருக்கின்ற பதினாறு தளைகளில் பத்து இயற்சீர் வெண்டளையும் ஆறு ஆசிரியத் தளையுமாகும். மரபில் வருகின்ற எந்தக் குறிப்பிட்ட யாப்பு வகையிலும் சேராதது இது. வஞ்சியடியை நோக்கி இதை மற்றொரு வஞ்சியினமாக வேண்டுமானால் கொள்ளலாம், 'எழுத்து'விலே வந்த பல கவிதைகள் இப்படித்தான் நடக்கின்றன என்பதையும் இங்கு சொல்லித்தான் தீரவேண்டும்.

இக்கவிதை எழுப்புகின்ற இன்னொரு பிரச்னையையும் இவ்விடத்திலேயே குறிப்பிட்டு விடலாம். முதற்பகுதியைவிட இரண்டாம் பகுதியில் ஏன் இரண்டு வரிகள் அதிகம் வருகின்றன என்று கேட்டால் அதற்குக் காரணம் கூறமுடியும். ஆனால் இக்காரணம் சற்று நீண்டுதான் வரும்.

எது அதிக துன்பமானது: பாலைவனத்தில் கடும் வெயிலில் சிக்கித் தவிப்பதா அல்லது அலை புரளும் கடலில் விழுந்து தவிப்பதா? என்னைப் பொறுத்த வரையில் நீரில்லாத இடத்தில் ஏற்படும் வேட்கையைவிட பயனற்ற நீர்நிறைந்த இடத்தில் ஏற்படும் வேட்கையே கொடுமையானது என்பேன். மணற்பரப்பில் கருகுவதைக் காட்டிலும் நீர்ப்பரப்பில் புகள்வது துன்பமானதே. அதுமட்டுமல்ல; பாலையில் சோலையை அடைவது பிரயாணத்தின் முடிவல்ல; அதேபோல கடலில் இருந்து தீவை அடைவதும் பிரயாணத்தின் முடிவல்ல. ஆனால் பாலைவனச் சோலையை அடைவதைக் காட்டிலும் கடல் நடுவேயுள்ள தீவை அடைவது அதிக முடிவானதே, அதிக இன்பம் தருவதே. இதைக் காட்டவே இரண்டாம் பகுதியில் இரண்டு வரிகள் கூடுகின்றன. இதிலிருந்து கவிதைத் தலைவனுக்கு அலுவலக வாழ்க்கை மற்ற வாழ்க்கையைக் காட்டிலும்

அதிக தவிப்பு மிக்கது என்பதையும் உணர லாம்.

11

இது வரையிலும் உன்கண்கள் கவிதையைப் பல கோணங்களில் பார்த்தவைகளைத் தொகுத்தளிப்பது இப்பகுதியின் நோக்கமல்ல. இவ்வேலையை வாசகர்களே தான் செய்து கொள்ள வேண்டும். வேறென்ன நோக்கம் என்றால் பின்வருவதுதான் அது.

'எழுத்து'விலே புதுக்கவிதை என்று சொல்லப்பட்ட கவிதை ஒன்று வந்தால் அது எவ்வளவு தூரம் புதுமையாக இருக்கும், எவ்வளவு தூரம் அது மரபை முழுவதும் ஒட்டியே இருக்கும், எவ்வளவு தூரம் அது மரபை ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் என்பதை அறிவதற்கு ஒரு எடுத்துக் காட்டை இது வரையும் ஆராய்ந்து பார்த்தோம். இவ்வாறு புதுமை இது, மரபு இது இதுவரையில் மட்டுமே மரபு இது என்று பார்த்தால் இக்கவிதை எப்படிப்பட்ட கவிதை, நல்லதா, கெட்டதா, சிறந்ததா என்று சரியாகப் புலப்பட ஏதுவில்லை. எனவே இதன் தரத்தை முடிவிடுவதே இப்பகுதியில் செய்ய வேண்டிய வேலை.

மரபைவிட்டுப் பிரியாமல் மரபுக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பதே கவிதையின் சிறப்பைக் காட்டாது; மரபை உடைத்துவிட்டு முழுவதும் புதுமையாக இருப்பதே கவிதையைச் சிறப்பாக்காது. இலக்கியப் படைப்புக்குரிய இரண்டு பிரிவான உருவமும் உள்ளடக்கமும் இணைந்து ஒன்றாய் அமைய வேண்டும்; பிறகு அக்கவிதை இலக்கியப்பாதையில் அடுத்த அடியை எடுத்து வைக்கின்றதா என்று பார்க்க வேண்டும். இரண்டுக்கும் ஆம் என்பதுதான் பதிலென்றால் கவிதை சிறந்தது, புகழத் தகுந்தது என்று கூறலாம்

உன் கண்களின் உள்ளடக்கத்தையும் உருவத்தையும் பிரித்துப் பார்ப்பது அரிய செயலாகும். ஏனென்றால் கவிஞனின் மனதில் உள்ளடக்கம் நன்றாகக் கரைந்து பக்குவமாக வெளியேறியுள்ளது. உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் இருக்கின்ற இந்த இறுக்கமான தொடர்புக்குரிய காரணங்களை முன்பே (4:8) நாம் கண்டோம். அதை நான் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை.

இதுவரையிலும் உணர்ச்சி நிலையைச் சார்ந்த சுகவாழ்வுக் கண்வர்ணனைக்கு ஒருபுதிய திருப்பம் இக்கவிதையில் கிடைக்கின்றது. உணர்ச்சி நிலை மாறி அறிவு சார்ந்த நிலை பிறக்கின்றது. அதோடு தலைவிக்குத் துணைவி என்ற புதிய பெருமையும் கிடைக்கின்றது. அதனால் தலைவியின் கண்கள் காதல் நோயைத் தரவும் பிறகு காதல் நோயைத் தீர்க்கவும்தான் செய்யும் என்ற நிலைமாறி தலைவியின் கண்களுக்குப் பல வகைப் பயன்கள் கிட்டுகின்றன. பல வகைப் பயன்கள் கிட்டும்போது பலவகைப்பட்ட கவிதைகள் வர வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

எனவே இவ்விரண்டு வழியிலும் உன் கண்கள் தலை தூக்கி கம்பீரமாக நிற்கின்றது. அதனால் இதைச் சிறந்த கவிதை என்று கூறுவதில் தயக்கமே தேவையில்லை.

இயல்பாகத் தொடர்ந்து வரும் படிமங்களையும், நேர்-முரண் உத்தியினையும், தன்னிலையுடன் சமூக நிலையைக் காட்டும் அருமையினையும், அக வாழ்வோடு புற வாழ்வை நேரடியாக காட்டும் புதுமையினையும் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கும்போது, இதுவரை தமிழில் உள்ள சிறந்த கண்வர்ணனைக் கவிதைகளுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்படித்தான் இதைப்பற்றி நினைக்கத் தோன்றுகிறது: விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச்சிறந்த கண்வர்ணனைக் கவிதைகளில் ஒன்று வல்லிக் கண்ணனின் உன் கண்கள்.

———

மறு பயணம்

இரா. மீனாட்சி

மண்ணின் அடி வயற்றில்
அண்டத்தின் துளியாக ஆலவிதை
தாய்க்குருதி உணவாக வாய்பிளந்து
இலைத் துளியாய் மேலேறி
புத்துலகில் மரமாகி
வளர்ந்த வாழ்வு இலக்கியமே.

மேலேறும் முதற்பயணம் ஆயிற்று
சிலபத்து ஆண்டெல்லாம் செலவென்று
வான் தந்தை கண்டுவிட
ஆலமரம் துடித்த தெல்லாம் காற்றே கதை
சொல்லும்.

வளர்ந்து வளர்ந்து வளர்த்த வாழ்வு
பச்சை இலையாகி சிவந்த பழமாகி
பழத்துள்ளே கருவாகி, கருவிற்குள் சத்தாகி
காவியம் நீள்கிறது.

தாயான மரத்திற்கு செல்லக்குழந்தைகளை
தன் தாய்க்குக் காட்டி வரும்
ஆசை இருக்காதோ ?
உறவு நிலைத்திருக்க கிளைத்தது பெரும் பாசம்
உடம்பெல்லாம் வேர்கிளைக்க மண்ணோக்கி
மறுபயணம்.

———

(8ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு நான் உண்டுன்னு இருக்கப்போறேன் னுட்டாராம். வந்த வங்க தங்க பிரசாரபலத்திலே நம்பிக்கை வச்சுக்கிட்டு போயிட்டாங்க. அவர் ஆதரவு எதிராளிக்கு இல்லேன்ன உடனே ரெண்டு பேருக்கும் திருப்தி. ரெண்டு நடவையும் தராசை பக்கம் சாய்த்தது அவர் பேச்சு தானே. சரி, தங்கள் பலத்தை பரீட்சை பார்த்துக்கிட வழி எல்லாம் பார்த்துக்கிட்டு இருந்தாங்க. ரெண்டு கட்சிகளும் இந்த தொகுதியை ஒரு பலப்பரீட்சையாக வச்சிக்கிட்டாங்க. வீராசாமி நாயக்கர் லக்ஷம் ரூபாய் செலவழிக்க தயாராக இருந்தா துரைசாமிநாயக்கர் கூட ஒரு லக்ஷம் செலவழிக்கத் தயாராக இருந்தாரு. ரெண்டு பேருக்கும் நம்ம மலையிலே ஏகப்பட்ட தோட்டம். ஏலக்காய், காப்பிக் கொட்டையிலே பணம் வந்து குவிந்துக்கிட்டு இருக்கறப்போ என்ன வந்துச்சு. பணத்தை தண்ணியா இறைக்க தீர்மானிச்சுட்டாங்க. அவுங்க பழைய மந்திரிகளை கூட்டியாரத் திட்டம் போட்டாங்க. இவுங்க புதிய மந்திரிகளை கூட்டியாரத் திட்டம் போட்டாங்க. தேர்தலுக்கு நிக்க நாமினேஷன் தாக்கல் பண்ற நாளும் வந்துட்டுது.

இருங்க கொஞ்சம், ஒலிபெருக்கியிலே.

வீராசாமி நாயக்கர்	7168
துரைசாமி நாயக்கர்	6749
சத்யநாதன்	64?5

என்ன இது எல்லாமே மாறுது!

மூணும் ஒண்ணை ஒண்ணு தொடுத்துக்கிட்டுப் போகுது.

எந்தக் குதிரை சயிக்கும்னு பந்தயம் யாரு கட்டறீங்க?

முதல்? இரண்டாவது? மூணாவது?

சத்தியநாதனுக்கு இவ்வளவு ஓட்டா?

மனிசன் திடீர்னு கடைசி நிமிசத்திலே தானே நாமினேஷன் போட்டாரு.

அப்படியா?

ஆமாம்...ரெண்டு கட்சிக்காரரும் போயிட்டாங்களா? தாலூகாபீசுக்கு ரெண்டுபேரும் ஊர் கோலத்தோடே நாமினேஷன் தாக்கல் செய்யப் போனாங்க. சப் கலெக்டர் முகாம் போட்டிருந்தாரு. ரெண்டு பேரும் நாமினேஷன் கொடுத்துப்போட்டு ரெண்டு பேரும் வெளியே வந்து தாலூகா ஆபீஸ் காம்பவுண்டை விட்டு வெளியே வாரபோது சத்யநாதன் ரெண்டு பேரைக் கூட்டிக்கிட்டு உள்ளே வந்தாரு. இவரு எதுக்கடா வாராருன்னு அவங்க முளிச்சுப் போயிட்டாங்க. அவரு உள்ளுக்குப் போய் கொஞ்ச நேரம் கழிச்சு வெளியே வந்தபோது தான் அவுங்களுக்கு உறுதியாச்சு, அவரும் நான் நியமனத்தை தாக்கல் செய்துபோட்டு வாரார்னு ரெண்டுபேரும் அப்படியே அசந்து போயிட்டாங்க. அவுங்க மட்டும் என்ன, ஊரே திகைச்சு போச்சு சுயாராச்சியம் வாரவரைக்கும் இந்த ஊரிலேமுதல்ஆளா இருந்தவரு, வந்தஅண்ணை முதல் இந்த இருபது வருஷமா தானுண்டு தன் ஆச்ரமம் உண்டுண்ணு இருந்துக்கிட்டு இருந்தவரு. கொடுக்க வந்த பதவிகளை எல்லாம் உதறித்தள்ளினவரு நாடும்அரசியலும்போகிற போக்கைப் பாத்து கசந்து பேசிக்கிட்டு இருந்தவரு. இப்படி ரெண்டாம் காதுக்குத் தெரியாமே செய்துட்டாரு. யாருக்கும் புரியல்லே.

திடீர்னு பதவியாசை வந்திருக்கும்னும் சொல்றதுக்கில்லே.

அப்படி இனிமேல் சொன்னாலும்சொல்லுவாங்க.

நீங்க எப்படி வேணுமா நினைச்சிங்கிடுங்க. நியமனப் பத்திரம் தாக்கல் செய்துபோட்டு நேரே ஆச்ரமத்துக்குப் போயிட்டாரு. இரண்டு கட்சி பெரிய மனுசங்களும் ஓடினாங்க. அவரு கிட்ட கேட்டாங்க என்னங்க இந்த மாதிரி செய்து போட்டீங்க. என்ன தப்பா செய்து போட்டேன்னுன்னு சிரிச்சாரு. தப்புன்னு சொல்ல வருவோங்களா? நீங்க நிக்கப் போகிறதாக...ன்னு இழுத்தாங்க. ஓங்ககிட்ட சொல்லலியேன்னு தானே சொல்ல வறீங்க. எனக்கே இப்போ இரண்டு மணிவரைக்கும் தெரியாதே. தெரிஞ்சிருந்தால்லே உங்ககிட்ட சொல்லன்னுரு. நீங்க நிக்கிறதாக சொல்லி இருந்தீங்கன்னு—அப்படின்னு அவுங்க இழுத்தாங்க. நீங்க ரெண்டுபேரும் நின்னிருக்க மாட்டிங்க அதானே சொல்ல வரீங்கன்னு அவர் பளிச்சுனு கேட்டுட்டாரு. அவுங்க தலையசைச்சு எங்க தலைமைக்குச் சொல்லி கேட்டிருப்போம்னுங்க. அவரு சிரிச்சுப் போட்டாரு. இந்தக் கோட்டையை பிடிக்கிறது யாருன்னு நாடு முழுதும் பாத்துக்கிட்டு இருக்கு. கவுரவம்லே இப்போ முன்னே வந்து நிக்குது. ஒரு அப்பாவி சர்வோதயக்காரன் கையிலே இந்தான்னு உங்க தலைமை கொடுத்திடும்னு நீங்க எதிர் பார்க்கிறீங்களா? இல்லே என்னைத்தான் நம்பச் சொல்றீங்களா? அதுவும் நாட்டைவிட கட்சி தான் பெரிசுன்னு வந்துட்ட காலத்திலே இதோ பாருங்க.........

கொஞ்சம் இருங்க பாட்டயா ஒலிபெருக்கியிலே.........

வீராசாமி நாயக்கர்	8293
துரைசாமி நாயக்கர்	8468
சத்யநாதன்	7966

அடியாத்தே!

கடும்போட்டி ஆயிடுச்சே!

நூற்றுக் கணககுலேல்லே ஒன்னேடே ஒன்னே ஓட்டிக்கிட்டுப் போகுது.

இப்போ எவண்டா பந்தயம் கட்டறவன்?

என்ன இருந்தாலும் மேல் ரெண்டிலே ஒன்னு தாண்டா.

அட இன்னும் ஐயாயிரத்துக்குஅங்கிட்டுத் தான் பாக்கி.

சத்யநாதன் இந்த ஐநூரை எட்டிப் பிடிக்க எந்நேரம் ஆகும்?

அட, யாருடா இவன் பேசறுன்!

அங்கிட்டும் கொஞ்சம் கூடும்லே.

சத்யநாதன் சயிச்சுட்டாருனு;

பர்ட்டையா சொல்லுங்க......

இப்போ அவுங்க பேசிக்கிட்டாங்களே சயிச் சுட்டாருன்னு அதையேதான் அவருகிட்டே கேட்டாங்க. நீங்க செய்யரதை எங்ககிட்ட சொல்லிட்டா செய்யமாட்டோமா. நீங்க எங்களை சயிச்சுட்டீங்கன்னு வச்சுக்கிடுங்க. அப்புறம் என்ன செய்வீங்க தனியாளா இருந்துக் கிட்டு அங்கு? பக்குனு சிரிச்சுட்டாரு அவரு. எப்பவும் சிரிச்சுத்தான் பேசுவாரு. புருவம் நெறிச்சு யாரும் பார்த்ததில்லே. அவரு கேட் டாரு. ரெண்டு கேள்வியை சேர்த்து கேட்டுட் டீங்க. என்னைக் கேட்டுக்கிட்டுத்தான் நீங்க எதுவும் செய்யணும்னு நான் எதிர் பார்த்து இந்த இருபது வருஷமா உங்ககிட்ட உறவு வச்சிக்கிட்டு இருந்தேன்னு நீங்க நினைச்சிருந் தீங்கன்னு தப்பா நினைச்சுட்டீங்க. அதோ பாருங்க...உங்களுக்கும் எனக்கும் ஆதர்சமாக இருக்கிறவரு. அவரை கேட்டுக்கிட்டுச் செய் வீங்கன்னு எதிர்பார்த்தேன். மகாத்மா காந்தி படத்தைக் காட்டினாரு. அந்த நம்பிக்கை யிலேதான் உங்க கழுத்திலே கதர் சிட்ட மாலை யைப் போட்டு உங்களை வாழ்த்தினேன். இப்போஎனக்குப் படுது-ரெண்டுசிட்டம்எனக்கு வீணாயிருச்சுன்னு சொன்னாரு. அவுங்களுக்கு சங்கடமாப் போயிட்டது. ரெண்டாவது கேட் டீங்களே தனியா என்ன செய்வீங்கன்னு அடிப் படையான விஷயத்தை தொட்டுட்டீங்க. நானும் அதைத்தான் யோசித்தேன். தனியா ஒருத்தன் என்ன செய்ய முடியும்னு தயக்க மாகத்தான் இருக்கு. இப்போ தனிமனிதனை கணக்கிலே எடுத்துக்கும்படியா இல்லை. எதுவும் பத்துப்பேர் சேர்ந்துக்கிட்டு செய்கிற காரியமாத்தான் நடக்கிறது. ஓடுகிற பஸ்ஸு மேலே கல்லெறியக்கூட பத்து பேர் சேர்ந்துக் கிடற காலமா போச்சு இல்லே. அதனாலே தனிமனுசன் மேலே நமக்கு நம்பிக்கையே இல்லாம போச்சு. ஏன், தனிமனிசன் என்கிறது மறந்தே போச்சு. ஓட்டு பலத்தாலேதான், கையைத் தூக்கி மெஜாரிட்டி மைனரட்டி பாத் துத்தான் எந்தக் காரியமும் நடத்தி ஆகணும், அதுதான் நடக்குதுன்னு எனக்கு தெரியா துன்னு நினைக்கிறீங்க? நல்லாத் தெரியும். முன்னே மனுசன் கடவுள் கையிலே எந்த முடிவுக்கும் விட்டான். இப்போ மெஜாரிட்டி தான் கடவுள். அது கொடுக்கிற வரத்தை, இல்லை, அதிகாரத்தைத் தனி மனிதன் வாங்கிக் கிடனும். அதுதான் நடக்குது. சங்கமாச் சேர்ந்து திடீர்னு ஊருக்கு தண்ணி இல்லாமே பண்ணிட முடியும், விளக்கு இல்லாமே பண்ணிட முடியும். ஊரை நாற வச்சுட முடியும். வண்டிங்க ஓடாமே செய்ய முடியும். துணி வெளுக்காம செய்துட முடியும், பாலு கிடைக்காமே செய்துட முடியும். விவசாயம் செய்யாம, விளைஞ்ச பயிரு நிலத்திலேயே கிடக்க, ஒரு நாளைக்கு பதினாயிரக் கணக்கிலே கஜம் உற்பத்தி செய்கிற மில்லுக ஓடாமல் இருக்க, இப்படி எதையும் கூட்டமாக கட்டுப் பாடு செய்துக்கிட்டு மேலே எதுவும் நடக்காமே முடமாக்க எவ்வளவு சக்தி இப்போ கிடைச் சிருக்கு. இதெல்லாம் தனிமனிசனாலே முடியுமா நிச்சயமா முடியாதுதான் நீங்க நினைக்கிறது ரொம்ப சரின்னு சொல்லி சிரிச்சாரு. அவுங்க ளுக்கு அவருகிட்ட என்ன பேசறதுன்னு தெரி யாமே தவிச்சாங்க. அப்போ அவரு கேட் டாரு...இது அத்தனையையும் இந்த இருபது வருசமா உங்க மெஜாரிட்டி பலத்தாலே தடுக்க முடியாதது மட்டுமல்லே. வளர்த்து விட்டுட் டீங்க. ஓங்க மெஜாரிட்டி பலத்துக்கு அவ்வளவு சக்தி. அப்படின்னு எளப்பமா சிரிச்சாரு.

கொஞ்சம் இருங்க பாட்டையா. ஒலிபெருக் கிலே...

வீராசாமி நாயக்கர்	9078
துரைசாமி நாயக்கர்	9046
சத்யநாதன்	9001

இறுதி முடிவுகள் அடுத்த ஒலிபரப்பில் அறிவிக்கப்படும்.

இன்னும் சுமார் மூவாயிரம் வாக்குதானே இருக்கு

மொத்தம் முப்பதாயிரம் தானே?

என்னப்பா அதிசயமான தேர்தலா இருக் குது!

நூற்றுக் கணக்கிலே வித்தியாசம் வந் துட்டுது போன வாட்டி. இப்போ பத்துக் கணக்கிலே வித்தியாசம் வந்துட்டுது.

அட, யாரு செயிச்சாலும் பத்து, அம்பது, நூறுக்குள்ளேதான் வித்தியாசம் இருக்கும் போலிருக்கு.

வீராசாமி நாயக்கருதான் அடிக்கொருதவா லீடிலே இருந்திருக்காரு.

ஏன் துரைசாமி நாயக்கரு ரெண்டு மூன்று வாட்டி அவரை மீறி இருக்காருல்லே.

அது சரிப்பா, சத்யநாதன்தானேப்பா ஒரே சீராக ஏறிக்கிட்டே வந்திட்டிருக்காரு.

பின்னாடி எல்லாம் அவுங்க ரெண்டு பேர் ஓட்டுகளையும் தானேப்பா இவரு புடுங்கிக் கிட்டு ஏறி இருக்காரு.

இந்த மாதிரி அதிசயமான தேர்தல் வேறே எங்கேயும் நடந்து இருக்காதுப்பா.

இன்னும் கடாசியிலே என்ன அதிசயம் இருக்கிறதோ?

சரி, நீங்க சொல்லுங்க பாட்டையா...

அது சரி, அவுங்க இப்படித்தான் பேசிக் கிட்டு இருப்பாங்க.

கடாசியிலே பாரு அவனவன் எப்படிக் குதிக்கப் போறான் பாரு. இங்கே பேசிக்கிட்டு இருக்கிற ஒவ்வொருத்தரும் இந்த ரெண்டு மசமா தங்க உசிரை விட்டில்லே வேலை செய் திருக்காங்க அவுங்க அவுங்க ஆளுக்கு.

அந்த சர்வோதயக் காரருக்குமா ஆளுக அப்படி உழைச்சாங்க?

அந்தக் கதையைக் கேளு. மெஜாரிட்டி பலத்துக்கு அவ்வளவு சக்தின்னு சிரிச்சாருன்னு சொன்னேனே. அவரு சொன்னாரு. நான் தனி மனிசன்லே நம்பிக்கை வச்சவன். காந்தி அதான் சொல்லிக் கொடுத்திருக்காரு. சத்யாக்ரகி என்கிறவன் தனிமனிசன். காந்தி. தனிமனிசனை சுண்டிப்பார்த்து தேர்ந்தெடுத்

தாரு. உப்பு சத்யாக்கிரகத்துக்கு குறிப்பா நூறுபேரை பொறுக்கினாரு. தனிநபர் சத்யாக்கிரகத்துக்கு வெள்ளைக் காகிதத்திலே கையெழுத்து வாங்கின மாதிரி சத்தியம் வாங்கிக்கிட்டு களத்திலே இறக்கினாரு ஆளுகளை. அப்படிப்பட்டவன் தான் சத்யாக்ரகி. அவன் தனிமனுசன். யேசு கிறிஸ்து மாதிரி. சிலுவையிலே அறைபடத் தயாரா வீட்டை விட்டு வெளியேறினவன். அவன் தனிமனிதன். பேல் வண்டி முன்னாலே படுத்து நெஞ்சிலே வண்டியை ஏத்திக்கிட்டவன். அவன் தனிமனிதன். கையிலே 'பிடித்த கொடியை பிடிவிடாமே பொட்டுலே அடி விழுந்து உயிரை விட்டவன் அவன் தனிமனிதன். கள்ளுக்கடை முன்னாலே துப்பாக்கிக்கு நெஞ்சைக் காட்டி குண்டை இந்தப் பக்கம் வாங்கி அந்தப்பக்கம் விட்டவன். தனிமனிசன். அவன் தான் சத்யாக்கிரகி... இப்படி அவர் பேசிக்கிட்டு வாரபோது அவரு முகத்திலே எப்பவும் இருக்கிற சிரிப்பெல்லாம் ஓடிப் போச்சு. அருள் வந்த முகம் மாதிரி ஆயிடுச்சு, இருந்தவங்க திகைச்சுப் போனாங்க. அவரு மேலே சொன்னாரு. அவன் தான் சத்யாக்கிரகி. அவன் இன்னைக்கு இல்லே—இல்லே—தப்பு இருக்கான். நீங்கள் நினைக்கிறமாதிரி அவன் இன்னைக்கு பிள்ளைப் பூச்சி ஆயிட்டான். வேத்தாளு துப்பாக்கிக்கும் லாதிக்கும் முன்னே எட்டு வச்சவன் இப்போ தன்னாளு கல்லுக்கும் கம்புக்கும் முன்னாலே மலைச்சு நிக்கிறான். ஆமாம்அவன் பிள்ளைப்பூச்சியாத்தான் ஆயிட்டான். அவனா ஆனான்? இல்லே அவனை ஆக்கிட்டாங்க. நீங்க ஆக்கிட்டீங்க. கம்பளியை உதர்ற மாதிரி உதறி எறிஞ்சிட்டீங்க. அந்த புடம்போட்ட சரக்குக்கு உபயோகம் இல்லாமே போச்சு உங்கள் மெஜாரிட்டி காலத்திலே. தனிமனிசன் வேலை அவன் தடியடி பட்டதோட, சிறையிலே அணு அணுவா உடம்பு சித்ரவதைப் பட்டதோடே, தன் வாழ்வை லட்சியத்துக்காக அர்ப்பணித்துக்கிட்டதோடே தீர்ந்து போச்சுன்னு நீங்க முடிவு செய்திட்டீங்க. அவனை உக்காத்தி வச்சிட்டீங்கன்னு சொல்லி சிரிச்சாரு. ரொம்ப கடுப்பான சிரிப்பா இருந்திச்சு. அவன் பிள்ளைப் பூச்சி ஆகாமே என்ன செய்வான். இதைத்தான் நான் இன்னைக்கு காலையிலே நினைச்சுக்கிட்டு இருந்தேன், எனக்குள்ளே கேட்டுக்கிட்டேன். நான் சத்யாக்ரகியா, பிள்ளைப் பூச்சியா, இல்லே, புழுவாயிட்டேனான்னு. இந்தா... அவரைப் பார்த்துக் கேட்டேன். அவர் என்னவோ பேச வாயைத் திறந்த மாதிரி இருந்தது. சிரிச்சமாதிரி இருந்தது. நீ சத்தியாக்கிரகி தானான்னு என்னைக் கேக்றியா, உன்னைக் கேட்டுக்கன்னு காதிலே சொன்ன மாதிரி இருந்தது. சந்தேகமா இருந்தா உரைச்சுப் பாத்துக்கன்னு சொன்ன மாதிரி இருந்தது. இதை சொல்லிப் போட்டு, அவரு, ஆமாம் அதை உரைச்சுப் பாத்துக்கத்தான் நான் உங்களோடே களத்திலே குதிச்சிச்சிருக்கேன்னு போடுசா சொல்லி, பாண்டவங்க பதிமூணு வருச அஞ்ஞாத வாசத்திலேருந்து வெளிவந்த மாதிரி ஏத்திரிச்சுட்டாரு. அவுங்களுக்கு அப்பவும் ஒன்னும் புரியல்லே. அவரு சொல்றதெல்லாம் சரியாத்தான் சொல்றாரு. காலம் கொஞ்சம் கோளாருத்தான் இருக்கு. அதுக்கும் சத்யாக்ரகிக்கும் என்ன சம்பந்தம்னு நிதானிக்க முடியல்லே. அவர் பிடிவாதம் ஊருக்கு நல்லாத் தெரியும். சரி, நாங்க வாரோம். உங்களுக்காக நாங்க வாபஸ் வாங்கிக்கிடத் தயார்தான். ஆனால் நீங்களே சொன்னபடி தலைமை இடம் கொடுக்காது. அதுக்கு அவகாசமும் இல்லாமே போயிடுச்சு. நீங்கள் செயிச்சுட்டீங்கன்னா எங்களுக்கு ரொம்ப சந்தோசம்தான். ஆனா எங்களுக்கு கட்சி துரோகம் பண்ணினவங்கன்னு பேர் வந்துடக்கூடாதுன்னு இழுத்தாப் போல பேசினாங்க... அவரு அவுங்களை முழுச்சுப் பாத்துச் சொன்னாரு. நான் என் சொந்த பலத்திலே... இல்லே... தப்பு காந்தி பலத்திலே— அவரை இன்னும் நம்ம சனங்கள் மறக்காம இருந்தால்—தலைவர்கள் மறந்துட்டாலும் சனங்க மறந்திருங்க, மறந்திருக்க மாட்டாங்கன்னுதான் நினைக்கிறேன். அவர் பலத்திலே தான் நிக்கறேன். நீங்க போர்க்களத்திலே நின்னுக்கிட்டு பாசம் காட்ட வேண்டாம். எனக்கு நீங்க காட்டினாலும் சத்யாக்ரகி காட்டமாட்டான். அதை ஞாபகத்திலே வச்சுக்கிடுங்கன்னாராம். அவுங்க சிரிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க.

பிறகு? அவர் ஒருத்தராகவே தன் பிரசாரத்தை நடத்திக்கிட்டாரா? சீக்கிரம் சொல்லுங்க. ஓட்டு முடிவு சொல்லுங் காட்டியும். அப்புறம் கூட்டத்திலே உங்களை பார்க்க முடியாமே போயிடும். கேட்க முடியாமே போயிடும் சத்தத்திலே.

அவரு பிரசாரம் நடத்தினதே தனி தினிசாக இருந்துச்சு. இப்படியும் நடக்குமான்னு. ஆனால் அப்படி ஒரு தடவை நடந்திருக்குது. உங்களுக்குத்தெரியுமோ என்னமோ, ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தேழு தேர்தல்லே பண்டித மதன் மோஹன் மாளவியா என்ன செய்தாரு தெரியுமா, அவருக்கு காங்கிரசிலேயும் இடம் உண்டு. இந்து மகாசபையிலும்இடம் உண்டு. விசித்திரமான அரசியல்வாதி அவரு. அவருமாதிரி ஒருத்தரு இப்போ இருக்க முடியாது. ஒரு தொகுதியிலே தேர்தல் பிரசாரத்துக்குப் போனாரு. அந்த தொகுதியிலே காங்கிரஸ் அபேட்சகராக லாலா லஜபதிராய் மகள் இந்து மகாசபை வேட்பாளராக பெயரு எனக்கு ஞாபகம் இல்லை—பிரபல தலைவி மாளவியா அவுக ரெண்டு பேரையும் ஒவ்வொரு மேடையிலே பக்கத்திலே உட்கார்த்திக்கிட்டு ரெண்டு பேரைப்பற்றிச் சொல்லி ரெண்டு கட்சிகளின் கொள்கைகளையும் சொல்லி உங்களுக்கு தோன்றுகிறபடி ஓட்டுப் போடுங்கன்னாராம். இந்த மாதிரி எங்கேயாவது நடந்திருக்கிறதாக கேட்டிருக்கிறாயா தம்பி? சொல்லு...

அந்த மாதிரி...?

அந்த மாதிரி இவரு வேறொரு விதமாச் செய்தாரு. கையிலே காந்திப்படத்தை வச்சுக்

கிட்டாரு. தேசக் கொடியை பிடிச்சுக்கிட்டாரு. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு தடவை தான் போனாரு. சனங்களைக் கூப்பிட்டுச் சொல்வாரு. அவரைப் பார்க்கவுமே அவர் இருபது வருசத்துக்கு முந்தி, இருபது வருஷம் அந்த கிராமத்துக்கு வந்து தேசிய எழுச்சி ஊட்டினதெல்லாம் அவுகளுக்கு ஞாபகம் வந்திருச்சு. தெய்வம் வந்து விட்டமாதிரி பழயவங்க வந்து கும்பிட்டுக் கேட்டாங்க. புதுசா கட்சிப்பற்றுஇருந்தவங்க அவரை கும்பிட்டுப் போட்டு இவரு எதுக்கு நம்ம சண்டைக்கு நடுவிலே வாராரு. பேசாமே வயசு காலத்திதிலே சும்மா இருக்காமே இந்த வயசுலே தற்கால அரசியல் இவருக்கு ஒத்துக்குமா. சோஷலிசம் பேசிக்கிட்டிருக்கிற காலத்திலே இவரு என்னமோ காந்தி காந்தின்னு சொல்லிக்கிட்டு இருக்காருன்னு அப்படியும் பேசிக்கிட்டுப் போனாங்க. அவரு சொன்னாரு: நான் உங்களுக்கெல்லாம் புதுசில்லே. வீராசாமி நாயக்கர், துரைசாமி நாயக்கர் அவுக ரெண்டு பேரும் உங்களுக்குப் புதுசில்லே. அவுக ரெண்டு பேருக்கும் ஓட்டுப் போடாதீங்க, எனக்குப் போடுங்கன்னு கேட்கவல்லே அவுங்கரெண்டு பேருக்கும் நான் உங்களை ஓட்டுப் போடச் சொல்லி கேட்டிருக்கிறேன். இதே இடத்தில் நின்று ரெண்டு தடவை துரைசாமி நாயக்கர் தோத்ததும், மூணும் தடவை வீராசாமி நாயக்கர் தோத்ததும் உங்களுக்குத் தெரியும். நீங்கதானே அவுங்களைத் தேர்ந்தெடுத்தீங்க. அவுங்க ரெண்டுபேரும் ரெண்டு முனை. ரெண்டு முரட்டுக்கட்சிக்குச் சின்னங்கள். அவர்களா ஜயித்தார்கள் தோற்றார்கள்? இல்லே, இல்லே. கட்சியும் கொள்கையும் ஜயித்தன தோற்றன. ஆனால் வருசம் இருபது ஓடிப் போயிருச்சு. ரெண்டு முனையும் அததோட பலப் பரீட்சையிலே சனங்களை, ஊரை மறந்து போயிட்டாங்க. இப்போ மூணும் முனை ஒண்ணு வேணும்னு தோணுது. அந்த மூணும் முனை இதோ...என்று காந்தி படத்தைக்காட்டி இவருக்கு ஓட்டுப் போடச்சொல்லி கேட்டுக்கறேன். நான் அவருக்கு ஒரு சின்னம்: அவ்வளவுதான் என்று சொல்லுவாரு இந்த மாதிரி பிரசாரம் பண்ணி நீ பார்த்திருக்கிறீயா தம்பி? இன்னும் ஒரே விஷயம் சொல்லிடறேன். இப்போ இறுதி முடிவு சொல்லறதுக்குள்ளே.

மாளவியாவாவது தான் நிக்கல்லே. மற்ற ரெண்டு பேரையும் கூட்டிக்கிட்டுப் போனாரு. இவரு என்ன செய்தார் தெரியுமா? இரண்டு நாயக்கரையுமே கூட்டிக்கிட்டு ஒரே மேடையிலே ஒவ்வொரு தடவை போய் பேசிட்டு இதையே சொல்லிட்டு வந்து ஆஸ்ரமத்திலே உக்காந்துக்கிட்டாரு. மறுபடியும் நூற்றுக்கிட்டு. என்னங்க இந்த அளவு தேர்தல் பிரசாரம் செய்தா போதுங்களான்னு கேட்டவங்களுக்கு அவர் சொன்ன பதில். ஆமா, நான் நிக்கிறேன் என்கிறதை அவுகளுக்கு காட்டிட்டு வந்துட்டேன். கேட்டுப் போட்டும் வந்துட்டேன். இதுக்கு மேலே காந்திக்காரன் செய்யக்கூடாது சனங்களை ஆட்டு மந்தையா நினைக்கக்கூடாது. காந்தி மறுபடியும் நாட்டுக்கு வேணுமா வேண்டாமான்னு முடிவு கட்டறது அவுக பொறுப்பு. காந்திக்காரன் செயிச்சுப் போட்டா என்ன செய்வான்கிறதுக்கு பதில் பிறகுதான் சொல்லணும். காந்தி வழி பட்டை போட்ட குதிரைக் கண் பார்வை இல்லை என்று பதில் சொல்லிப் போட்டாரு. போன வாட்டி எல்லாம் மேடை மேலே இரு பக்கத்து ஆளுகளும என்னம்மா பேச்சு பேசிக்கிட்டாங்க, ஏசிக்கிட்டாங்க புழுத்த நாய் குறுக்கே போகாது தம்பி அப்படி இருந்திச்சு. இந்த வாட்டி நாங்களே திகைச்சுப் போனோம். ஒரு வார்த்தைதப்பா பேசினாங்கன்னு நினைக்கிறே. வெளியூர்க்காரரு ஒருத்தரு வந்து ஒரு நாள் பேசினாரு. வழக்கமா பேசறபடி கொஞ்சம் நாக்கை நீளமாவிட்டாரு. இவரு உடனே மேடையிலே ஏறி, இந்த தொகுதியிலே இப்படி பேசாதீங்க உங்க கொள்கையை மட்டும் சொல்லிட்டுப் போங்கன்னுட்டாரு. மற்றவங்களும் சேர்ந்து பேசினவரு வாயை அடக்கிட்டாங்க. அதுக்குப் பிறகு நம்ம தொகுதிக்கு வெளியூரக்காரர்களே வேண்டாம்னு பிரசாரத்துக்கு முடிவு செய்ய வச்சுட்டாரு. தோக்கிறமோ செயிக்கிறமோ—இரண்டுபேரு தோக்கறது நிச்சயம்—நாளைக்கு ஒண்ணா ஊரிலே நடமாடணும் அதுக்கு குந்தகம் ஏற்பட்டிரக் கூடாதுன்னு வழி செய்தாரு. இவரு நிக்கிற பயத்திலே அவுங்களும் நல்ல ஊக்கமா பிரசாரம் செய்தாக. இந்த மாதிரி தேர்தல் இந்தியாவிலேயே நடந்திருக்குமான்னு சந்தேகம். அதுனாலேதான் சனங்க இந்த முடிவை இவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்துக்கிட்டு இருக்கு. பாரு, இரண்டு கட்சி ஆளுகளும் எவ்வளவு கொடி, பூமாலை கொண்டுட்டு வந்து மறைவா வச்சுக்கிட்டுஇருக்காங்க பாரு.. ஒரு கண்ணோட்டம் விட்டுப்பாரு... செயிச்சவங்க என்ன குதி போடப் போறாங்க பாரு...இந்தா மைக்கிலே தொண்டைக் கனைப்பு கேக்குதுபாரு. சொல்லப் போறாங்க. கூட்டத்தோட தவிப்பைப்பாரு. சங்கு வாடி வழியே நின்னு குத்திக் காளை வாரப்போ சனங்க கம்முனு இருப்பாங்களே அதுமாதிரி இருக்காங்க பாரு... மைக்கிலே பேசறாங்க...

இறுதி ஓட்டு எண்ணிகை விவரம்:

மொத்த ஓட்டுக்கள்	29999
வீராசாமி நாயக்கர்	9999
துரைசாமி நாயக்கர்	9999
சத்யநாதன்	10001

மற்ற இருவரையும்விட இரண்டு ஓட்டுகள் அதிகம் பெற்று சத்யநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

என்னப்பா இது!

எம்பா நல்லா கேட்டியா?

நம்புறுப்லியா இருக்கு!

இப்போ என்ன செய்யப் போறாங்க இரண்டு கட்சிக்காரங்களும்?

எந்தக் கொடியைப்பா புடுச்சிக்கிட்டு ஊர் கோலம் போகப் போறாங்க?

ஆமாம் கொண்டாந்திருக்கிற மாலை எல்லாம் என்ன செய்யப் போறாங்க?

இந்த மாதிரி எலக்ஷன் உலகத்திலேயே எங்கிட்டாவது நடந்திருக்குமாடா?

மூணுபேருக்கும் ஒரே கணக்கா ஓட்டு!

இரண்டு வோட்டிலே செயிச்சிருக்காரு!

அதுவும் மூணுவதாக நொண்டிக்கிட்டுவந்த குதிரை.

ரெண்டே ரெண்டு ஓட்டு!

அது பாருடா எத்தணி பெரிய முடிவை கொண்டாந்திருக்குது.

அதோ பாருடா. சைக்கிளும் கொடியும் மாலையுமா நிக்கிறவங்க என்ன செய்யறதுன்னு புரியாமே திகைச்சுக்கிட்டு இருக்காங்க.

அட, யாருக்கு ஜே போடறதுன்னு முளிக்கிருங்கடா.

புலிக தோத்துப் போச்சுடா!

பிள்ளைப் பூச்சி செயிச்சுரிச்சு!

அடே, இதுதாண்டா நிசப் புலி!

பூணை வராதவரைக்கும் கீச்சுக்கீச்சுன்னு கத்திக்கிட்டு இருந்துச்சுடா எலிக.

இப்ப பூணை வரவும்...

பூணை, புலி! என்ன செய்துடப்போகுதாம்?

அட, யாருடா கேக்கறவன்?

இருபது வருசமா அந்த கேள்வியை கேட்டுக்கிட்டு இருந்திருக்கணும்டா. என்ன செய்துக்கிட்டு இருந்தீங்கன்னு.

பிள்ளைப் பூச்சிகிட்ட அஞ்சு வருசம் களிச்சுக் கேளுங்கடா.

சனங்க காத்துக்கிட்டு இருந்திருக்காங்கடா இப்படி ஒரு சமயத்துக்கு!

சனங்க மனசை அப்படி லேசா மதிச்சுட முடியாது.

லேசாக புரிஞ்சுக்கிடவும் முடியாது.

காந்தி படத்தை காட்டி ஓட்டு வாங்கறது நடந்திருக்கு ஒரு தனி மனிசனுக்கு!

அவரு ஆளாக்கின கட்சியாலேயே வாங்க முடியாததை—அதைச் சொல்லு!

காந்தியை நாடு மறக்கல்லே.

அவரை மறந்தாங்களோ இல்லையோ, சத்ய நாதனை மறக்கல்லே.

என்னடா உளர்றே, காந்தி இல்லாட்டி சத்யநாதன் ஏது!

என்ன பாட்டையா, நீங்க பேசாமே இருக்கிங்க?

தம்பி, இவுக எல்லாம்தான் பேசிக்கிட்டு இருக்காங்களே. ஆளுக்கு ஆளு தோணினதை சொல்லிக்கிட்டு இருக்காங்க. தம்பி, வெள்ளைக்காரன் ஆண்டுக்கிட்டு இருக்கறப்போ ஒரே முனைதான் இருந்துச்சு. சுயராச்சியம் வந்த பிறகு இரண்டு முனை ஆச்சு. இப்போத்தான் தம்பி அவரு சொன்ன மாதிரி மூணும் முனை உருவாகி இருக்கு. அதை இவுங்க இன்னும் உணராமே ஏதேதோ அளந்துக்கிட்டு இருக்காங்க, தம்பி. இவுங்க சத்தத்திலே நாம பேசக்கூட முடியல்லே. அதோ பாரு கச்சேரிக்குள்ளே இருந்து அவங்க வாராங்க.

மூணுபேரும் முதவரிசையிலே வராங்களே!

ஆமாம், நடுவிலே வாராரு சத்யநாதன்.

செயிச்சவரு தோத்தவங்க மூணுபேரும் சேர்ந்தாப்பிலே வராங்க.

அதிசயமா இல்லே இருக்குது!

சத்யநாதனுக்கு வலப்பக்கம் வீராசாமி நாயக்கரு...

இடப்பக்கம் துரைசாமி நாயக்கரு.

நேரே மைக் முன்னாலே வந்து நிக்கிருங்களே.

ஆமாம் பேசப் போராங்க.

யாரு?

வீராசாமி நாயக்கரு பேசப் போருரு.

அன்பார்ந்த பொதுமக்களே, நம்ம நாட்டு சரித்திரத்திலேயே காணாத ஒரு சம்பவத்தை நீங்க இன்னைக்கு பாக்கிறீங்க. பொது மக்களான நீங்கள் எப்படிப்பட்ட சக்தி என்கிறது இன்னைக்கு புரிஞ்சு போச்சு. சத்யநாதன் அண்ணாச்சி வெற்றி, என் வெற்றி எங்க வெற்றி, உங்க வெற்றி.

என்னது இது! சொல்லிப் போட்டு பக்கத்துலே ஒருவர் கிட்ட இருந்து தன் கட்சிக் கொடியை வாங்கி தூக்கிக்காட்ராரு.

சத்யநாத அண்ணாச்சிக்கு ஜே!

இதென்ன இருக்கிறவங்களெல்லாம் மறைச்சு வச்சுருந்த கொடியை எல்லாம் தூக்கிட்டாங்க! அவரு கட்சி ஆளுக!

என்ன! சத்யநாதனுக்கு ஜே கத்தருங்க தொண்டை கிழிய!

கொஞ்சம் சத்தம் போடாமே இருங்க. துரைசாமி நாயக்கர் பேசப் போருரு.

அருமை தோழர்களே! நம்ம வீராசாமி நாயக்கர் சொன்ன மாதிரி அரசியலிலேயே நடக்காத ஒரு அற்புதத்தை நீங்க இன்னைக்கு பார்க்கிறீங்க. கட்சிக்கு அப்பாலேயும் அரசியல் உண்டு என்கிறதை நீங்க நிரூபிச்சுட்டீங்க. சத்யநாத அண்ணன் வெற்றி என் வெற்றி, உங்க வெற்றி, நம்ம வெற்றி...

என்ன இது அவரும் தன்கட்சிக் கொடியை பக்கத்திலே இருந்து வாங்கி உயர்த்திக் காட்டுராரு!

சத்யநாதன் அண்ணனுக்கு ஜே!

அட பாரையா இவுகளும் தங்க கொடியைத் தூக்கிக்கிட்டு கத்தருங்க. காதெல்லாம் செவிடாகுது.

கொஞ்சம் இருங்கையா சத்யநாதன் பேசப் போராரு!

அவரு பேசப் போராருன்னு சத்தமே இல்லே பாருப்பா.

ஷ்...பேசாதேய்யா.

சகோதரர்களே...

பாரையா ரெண்டு பேர் தோளுலேயும் கையைப் போட்டுக்கிட்டாரு.

நான் இப்பேர் ரெண்டு கொள்ளைக்காரங்களுக்கு நடுவிலே மாட்டிக்கிட்டேன். உங்க கண் முன்னாலேயே கொள்ளை நடந்திருக்கு...

என்ன சொல்ல வாருரு?

ஆளுக்கு பாதியா வெற்றியை தங்களுக்கு பங்கு போட்டுக் கிட்டாங்க.

தமாசாப் பேசராரு!

ஆம்மாம்.- நியாயம்தான். ஓட்டு விவரத்தை கேட்டிருப்பீங்க. எனக்கு கூட கிடைச்சிருக்கிற ரெண்டு ஓட்டு நான் அவுங்ககிட்டே இருந்து ஆளுக்கு ஒண்ணு பிடுங்கிக்கிட்ட ஓட்டுதான். அந்த ரெண்டு ஓட்டும் அவுங்களுக்கு ஆளுக்கு ஒண்ணு கிடைச்சிருந்துச்சுன்னு எனக்கு ரெண்டு குறைஞ்சு அவுங்களுக்குள்ளே சீட்டுப் போட்டு பாக்க வந்திருக்கும்.

ஆமப்பா நல்ல வேடிக்கைதான்!

நான் அவுக கிட்டேருந்து ஆளுக்கு ஒரு ஓட்டைப் பிடுங்கிக்கிட்டேன். அவுங்க வெற்றி யையே பிடுங்கிக்கிட்டாங்க. சரிபாதியா பிடுங் கிக்கிட்டாங்க நியாயம்தானே.

கூட்டம் சிரிப்பு தாளலே பாரு!

இதெல்லாம்கூட நீங்க தள்ளிறலாம் வேடிக் கைன்னு. நான் சொல்லப் போறதை நீங்க மறக்க முடியாது. எனக்கு அதிகமா கிடைச் சிருக்கிற ரெண்டு ஓட்டும் யார் ஓட்டு தெரியுமா? ஒண்ணு வீராசாமி நாயக்கரது. இன்னொண்ணு துரைசாமி நாயக்கரது.

என்ன! என்ன! என்ன!

பிரமிக்காதீங்க. நடந்ததுதான். நாங்க மூணு பேரும் நேற்று சேர்ந்தாப்பலே ஓட்டுப் போடப் போனபோது இவுங்க ரெண்டு பேரும் எங்க ஓட்டு உங்களுக்குத்தான்னு சொல்லிட்டுப் போனுங்க.

என்ன அவுங்க ஓட்டையே இவருக்குப் போட்டாங்களா?

நான் என் ஓட்டை எப்படிப் போட்டேன் தெரியுமா? அவுங்க கிட்டேகூட நான் இது வரைக்கும் சொல்லலே. உங்ககிட்டே சொல் றேன். என்னை நான் தேர்ந்தெடுத்துக்கிறதா? என் ஓட்டை எனக்கு போட்டுக்கிறதிலே அர்த் தம்? இவுக ரெண்டு பேருக்கும் போட மனசு வல்லே. எனக்கும் பொட்டுக்க விருப்பம் இல்லே காந்திக்குன்னு அதிலே எழுதிப் போட்டுட் டேன்.

அட, தன் வோட்டை இன்வாலிட் ஆக்கிட்டாரு.

என்னய்யா வேடிக்கை?

அவுக ஓட்டை இவருக்கு போட்டிருக்காங்க.

இவரு ஓட்டை காந்திக்கு போட்டிருக்காரு.

மூணு பேருமல்லே தங்க ஓட்டை தங்க ளுக்கு இல்லாமே வீணாக்கி இருக்காங்க.

இருங்க அவருமேலே பேசராரு.

இன்னொரு அதிசயத்தையும் கேட்டுக்கிடுங்க. ஓட்டு விவரம் ஞாபகம் இருக்கு இல்லையா? எனக்குப் போட்ட அவுங்க ரெண்டு ஓட்டை யும் தங்களுக்கு போட்டுக்கிட்டு இருந்தா? நானும் என் ஓட்டை எனக்குப் போட்டுக்கிட்டு இருந்தா...

ஆமப்பா.

வீராசாமி நாயக்கருக்கு ஒன்றுகூட பதினா யிரம்!

துரைசாமி நாயக்கருக்கு ஒன்றுகூட பதினா யிரம்!

சத்யநாதனுக்கு ரெண்டு குறைச்சு, ஒன்று கூடி பதினாயிரம்!

மூணுபேருக்கும் பதினாயிரம்.

மூணுபேருக்குள்ளே சீட்டுப் போட்டுப் பார்க்க வேண்டி இருந்திருக்கும் இல்லையா!

என்ன அதிசயமப்பா!

இப்போ சொல்லுங்க வெற்றி எங்க மூணு பேருலே யாருக்குன்னு!

சத்யநாதனுக்கு ஜே!

வீராசாமி நாயக்கருக்கு ஜே!

துரைசாமி நாயக்கருக்கு ஜே!

இருங்க அவரு பேசராரு...

எங்க மூணுபேருக்கா. ஜே போடுறீங்க? இப்படி இருபது வருசமா நமக்கு நாமே ஜே போட்டுத்தான் நாம் மூலத்தையே மறந்துட் டோம். ஆளுக்கு ஒரு முனையா பிடிச்சுக்கிட்டு ரெண்டு முனையா வகுத்துக்கிட்டு கிளித்தட்டு ஆடி வருந்திருக்கோம். மூன்ரும் முனை ஒண்ணு இருக்கு என்கிறதை மறந்துட்டோம். இந்த மூன்ரும் முனை இதுதான்...

என்ன, காந்தி படத்தை இல்லே தூக்கிக் காட்டுராரு.

மகாத்மா காந்திக்கு ஜே சொல்லுங்க!

மகாத்மா காந்திக்கு ஜே!

அடியாத்தாடி! என்ன சத்தம்!

சமீப காலத்திலே இந்த மாதிரி கேட்டதே இல்லையே.

இருங்க அவரு பேசராரு...

இந்த மூன்ரும் முனைதான்—அதுக்குப் பேருதான் சத்தியம்—அதுதான் இந்த தேர்தல்லே சயிச்சிருக்கு. இன்னும் சொல்லப் போனுல் சத்தியம் மூன்ரும் முனைகூட இல்லை. ஒரே முனைதான் உண்டு. அதுதான் சத்தியம். இனி நம்ம ஊருக்கு ஒரே முனைதான். அந்த ஒரே முனை நோக்கி முன்னேறுவோம்.

என்ன இது?

சொல்லிப் போட்டு காந்தி படமும் கையுமா தேசக் கொடியை பிடிச்சுக்கிட்டுப் புறப்பட்டுட் டாரு.

பாரப்பா வீரசாமி நாயக்கர் தன் கொடியை பிடிச்சுக்கிட்டு

துரைசாமி நாயக்கரும் தன் கொடியை ஆட்டிக்கிட்டு

ஊர்வலம் புறப்பட்டுட்டாங்க!

அட எல்லாக் கொடியும் சேர்ந்துக்கிச்சு.

மகாத்மா காந்திக்கு ஜே!

போட்டி போட்டுக்கிட்டுல்லே கொடியை ஆட்டிக்கிட்டுப் போருங்க.

என்ன தம்பி எல்லாரும் போயிட்டாங்க. நீ மட்டும் பிரமிச்சுப்போய் நிக்கிறே? ஊர் கோலத்தோடே போகல்லியா?.

பாட்டையா, நீங்களும் இருக்கீங்களா? இது நடந்தது தானான்னு என்னையே கேட்டுக் கிட்டு இருக்கேன். இல்லாட்டி கனாக் கண்டேனா?

தம்பி, நல்லாக் கேட்டுக்க. அற்புதங்கள் நடக்கிற நாட்கள் எப்பவும் திரும்ப வரலாம்... தம்பி.

———

அக்டோபரில்
வெளிவருகிறது

நடை

இலக்கிய முத்திங்கள் ஏடு

இலக்கிய விழிப்பும் ஆர்வமும் கொண்ட
சிலர் ஒன்று சேர்ந்து கூட்டாக
உருவாக்கும் புதிய ஏடு. **நடை**

புதிய இலக்கியப் படைப்புக்கும்
திறனாய்வுக்கும் மற்றொரு வாய்ப்பை
அளிக்கும் புதிய ஏடு **நடை**

அக்டோபர், ஜனவரி, ஏப்ரல், ஜூலை
மாதங்களில் வெளிவரும் **நடை**

கதை, கவிதை, நாடகம், கட்டுரை
திறனாய்வு முதலியவற்றை
வரவேற்கிறது **நடை**

ஆண்டுச் சந்தா ரூ. 3-00

சந்தா, படைப்பு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும் :

ஆசிரியர் : நடை
40, நத்தமர் தெரு,
சேலம்-3.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5 Printed by A. Rajaram for Ramalakshmi Press, 97, Big Street, Triplicane, Madras-5.